இதழ்-63

01.09.2023

# தூமி

பல்சுவை மின்னிதழ்



## பெருவெள்ளத்திற்கான பயணம்

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

துமி பல்சுவை மின்னிதழ்

ஆசிரியர்
ச. சந்தோஷன்

இணை ஆசிரியர்கள்
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

திறனாய்வாளர்கள்
கு. கீர்த்தனன்
வ.டியனி

வடிவமைப்பாளர்
வ. குணநீதன்

செய்தியியலாளர்
ந. மயூரன்

# இவ்விதழில் துமித்துளை...

03 மரண ஊர்வலத்தில் வெடி வெடிக்கும் கலாசாரம் பேராபத்து
06 கறுப்புகளின் வெறுப்பு
10 வெற்றிகரமாக நடைபெற்ற பயிற்சிப்பட்டறை
13 போதைப்பொருள் கொண்டு சென்றவருக்கு மரண தண்டனை
14 அவர் நிறுவவில்லை... உலகம் ஏற்கவில்லை...
17 சீனாவில் சிறாருக்கு கடும் சட்டம்
18 ஒன்று பட்டால்....
19 வயற்காடு (சிறுகதை)
31 தமிழ் சமுதாயத்தில் உள ஆற்றுப்படுத்தல்
38 மாணவர் மத்தியில் கொரோனாவின் தாக்கம்
41 சிறுவர்களுக்காக இலங்கை வந்த சச்சின்
44 சித்திராங்கதா
48 என்னென்ன மாற்றங்கள்




# மரண ஊர்வலத்தில் வெடி வெடிக்கும் கலாசாரம் பேராபத்து




தமிழர் பகுதிகளில் அண்மைக் காலமாக மரண ஊர்வலங்களில் சாரை சாரையாக வெடி வெடிக்கும் கலாசாரம் அதிகரித்து வருவது மக்கள் மத்தியில் விமர்சனத்தை ஏற்படுத்தியுள்ளது. தம்மிடம் உள்ள பணபலத்தை காட்டும் ஒரு வழியாக இன்று மரண யாத்திரைகளில் இறந்தவர் வீட்டில் இருந்து இடுகாடு வரை வீதியெங்கும் வெடி வெடித்துச் செல்வதை பரவலாகக் காணக்கிடைக்கிறது. மரணச் சடங்குகளின் ஒரு அம்சமாக இந்த வெடி கொளுத்தும் கலாசாரம் மாறிவிடுமோ என்கிற அச்சம் ஏற்படத் தொடங்குகிறது.

பொதுவாக மகிழ்ச்சிக்கான ஒரு வெளிப்பாடாக கருதப்பட்டு வந்த இந்த வெடி வெடித்தல் எவ்வாறு மரண யாத்திரைக்கான வழியனுப்பலாகிப் போனதென்று எவருக்கும் தெரியவில்லை. வெடி வெடிப்புக்களைக் கேட்டால் இறந்தவரை மகிழ்ச்சியாக அனுப்பி வைப்பதற்காக என்று காரணம் கூறுகிறார்கள். இந்த வெடி சத்தத்தால் இறந்தவரே எழுந்து வந்துவிடுவார் என்று அந்த இரைச்சலால் பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றனர். பாடசாலைகள், மருத்துவமனைகள் மற்றும் நீதிமன்றங்கள் என எந்த பாகுபாடும் இன்றி வெடிகளை கொளுத்தி ஒட்டு மொத்த சமூகத்திற்கும் இடையூறு விளைவிக்கிறார்கள். வாகனங்களே ஒலி எழுப்பத் தடை விதிக்கப்பட்டுள்ள இந்த முக்கியத்துவம் மிக்க இடங்களை இம்மியளவும் இந்த வெடி வெடிப்பவர்கள் கவனிப்பதாக இல்லை. அண்மையில் இவ்வாறு மரண யாத்திரையில் வெடி கொளுத்தியதால் அச்சுவேலி பகுதியில் தீ விபத்து ஒன்றும் ஏற்பட்டுள்ளது.

ஒரு இறுதி ஊர்வலம் சென்ற பாதையை திரும்பிப் பார்த்தீர்களே என்றால் வெடிக் கடதாசிகள் நிரம்பி வழியும். எந்தவித குற்ற உணர்ச்சியும் இன்றி சுற்றுச்சூழலை இவ்வாறு மாசுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமா, ஏற்கனவே பல வழிகளில் செயற்கை இரசாயனங்கள் எங்கள் மண்ணில் வீசப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் தேவையே இல்லாமல் வெடிமருந்து இரசாயனங்களையும் எமது மண்ணில் கலக்கச் செய்வது



எமது எதிர்கால சந்ததிக்கு நாம் செய்யும் மிகப்பெரிய துரோகமாகும். இறந்தவர் உடலிலிருந்து நோய்க்கிருமிகள் எந்தவிதத்திலும் வெளியேறிவிடக்கூடாது என்றுதான் நவ துவாரங்களையும் அடைக்கும் வகையில் கைக்கட்டு, கால்க்கட்டு, வாய்க்கட்டு, நாடிக்கட்டு, தலைக்கட்டு, தொப்புள்க்கட்டு, முழங்கால்க்கட்டு, கோவணக்கட்டு என்று எட்டுக் கட்டுகளை எமது உடலைச்சுற்றி கட்டினார்கள். இவ்வாறு எமது மரணச் சடங்குகள் இயற்கைக்கு பாதிப்பாகாதவாறு இருந்தது என்பதை நாம் மறத்தல் கூடாது.

தன் குடும்பத்தவருக்கோ, உறவினருக்கோ அல்லது தெரிந்தவர்களுக்கோ எந்தவித இடையூறும் ஏற்படாதவாறு தாம் நன்றாக இருக்கும் போதே தம் சீவன் போய்விட வேண்டும் என்பதுதான் பலரது இறுதி விருப்பமாக இருக்கிறது. அப்படியிருக்கையில் அவர்களின் மரண ஊர்வலம் எல்லோருக்கும் இடையூறாக பாரிய சத்தங்களுடன், சுற்றாடலையும்



மாசாக்கி நடந்தால் அவர்கள் ஆத்மா எப்படி சாந்தியடையும்? சாந்தியடைய வேண்டும் என்றால் அமைதியாகத்தானே ஊர்வலம் நடக்க வேண்டும்?

எமது மண்ணில் அடிப்படை வசதிகள் இன்றி வாழ்பவர்கள் நிறையப்பேர் உள்ள போது வீணாக இவ்வளவு பணத்தை வெடிக்கு விரயம் செய்தல் தர்மமாகுமா? இறந்தவர் ஞாபகார்த்தமாக எத்தனையோ நல்ல காரியங்களை செய்யலாம். பயன்பெற்றவர்கள் மனதார வாழ்த்தும் போது இறந்த ஆத்மாவும் மகிழ்ச்சி அடையும். இறந்தவர்கள் ஞாபகமாக அன்னதானங்கள் செய்யலாம். இல்லாதவர்களுக்கு புத்தாடைகள் வழங்கலாம். நிலத்தடி நீர் வற்றிக் கொண்டிருக்கும் இந்த காலத்தில் மழைநீரை உறிஞ்சி மண்ணிற்குள் அனுப்பும் தொட்டிகள் அமைக்கலாம். எல்லோரும் போற்றும் காரியங்கள் எத்தனையோ இப்படி செய்யலாமெனும் போது வீணாக விழலுக்கு இறைப்பது போல இவ்வாறு வெடி கொளுத்துவது எந்த விதத்திலும் அறச் செயலே அல்ல.

எமது சடங்குமுறையே இல்லாத ஒன்றை, எமது சூழலை மாசாக்கும் ஒன்றை கைவிட்டு, இறந்த ஆத்மாவின் இறுதி யாத்திரையை அமைதியாக யாருக்கும் இடையூறின்றி நடாத்தி, இயலுமானால் அந்த ஆத்மாவின் பெயரால் அறப்பணிகள் செய்து, இறந்த ஆத்மாவை சாந்தியடையச் செய்வோம்.

ABAYAM
அபயம்

# அபயம் இரகசியம் பேணும்

## இலவச வைத்திய தொலைபேசி அழைப்பு சேவை

# 071 07 12345



**மனநெருக்கடிகளில் இருப்பவர்களும், அவர்களது உள்ளம் உயிர் காக்க துணை நிற்பவர்களும் தொடர்பு கொள்ளக்கூடிய அவசர அழைப்பு**

(போதைப்பொருள் பாவனையில் இருந்து மீள நினைப்பவர்களும் இச் சேவையை பயன்படுத்தலாம்)



தங்களால் வழங்கப்படும் சுயவிபரங்கள் மற்றும் தகவல்கள் யாவும் இரகசியமாக பேணப்படும்.

**24 மணிநேரமும் வைத்தியரையும், ஆலோசகரையும் உடனடியாக தொடர்பு கொள்ளலாம்**

பாதிக்கப்பட்டவர்களோ அல்லது அவர்களை காண்பவர்களோ (உறவினர், நண்பர்கள், நலன்விரும்பிகள்) இச்சேவையை பயன்படுத்திக் கொள்ளலாம்.

பங்குனி 2021

அபயம் நிறுவனம்
மானிப்பாய், யாழ்ப்பாணம்




# கறுப்புகளின் வெறுப்பு

பெரிய கடல் வெளி. கரையோரமாய் ஒரு கம்பம். தொடக்கத்தில் அந்தக் கம்பத்தை ஒரே ஒரு கறுப்புத்தான் பற்றிக் கொண்டிருந்தது. காற்றும் பஞ்சமின்றி வீசியது. கம்பத்தை பற்றியிருந்த கறுப்பும் காற்றின் தயவில் கவலை மறந்து ஆடிக் கொண்டிருந்தது. ஒரு நொடியில் அதன் நிம்மதி குலையும்படி ஒரு சம்பவம் நடந்தது. எங்கிருந்தோ அந்தக் கொடிக்கம்பத்தில் வந்தமர்ந்தது இன்னொரு கறுப்பு. வந்த கறுப்பு தன் சிறகுகள் களைப்பாற அமைதி கொள்ளையில் இருந்த கறுப்பு ஆவேசமாய் சிறகடித்தது. களைப்பில் வந்த கறுப்பிற்கு கோபம் தலைக்கேறியது.

"உனக்கு என்னதான் ஆகிவிட்டது?"

"நீ என்னில் இருப்பதுதான் ஆகக்கூடாதது. ஆகிவிட்டது."

"ஏன் அப்படி?"

"இது என்னுடைய கம்பம். எனக்காக மட்டுமே நடப்பட்டுள்ளது. நீ இப்படி வந்தமர்வது அநாகரிகமாக தெரியவில்லையா உனக்கு?"

"ஓகோ.. அப்படியா??" கலகலவென்று கரைந்தது காகம்.
"உனக்கான கம்பம் இதென்றால் நீ ஏன் இன்னும் இதைப் பற்றியிருக்கிறாய்?? விட்டுப் பறந்து செல்ல வேண்டியதுதானே... உனக்கானது மட்டுமே இது என்றால் இக்கம்பம் உன்னைத் தேடி வருமல்லவா??"

"நான் தனியாய் பறப்பதா? கம்பத்தை விட்டு எப்படி என்னால் தனியாக பறக்க முடியும்? அது முடியாது.."

"என்னால் முடியுமே.. தனியாக மட்டுமல்ல உன் கம்பத்தை சுமந்துகொண்டு கூட என்னால் பறக்கமுடியுமே... இப்போது சொல் கம்பம் யாருக்கு சொந்தமானது?"

"என்ன குழப்பம் விளைவிக்கவென்றே வந்தாயோ?" கோபமாய் கேட்டது

கொடி.

“குழப்பம் விளைவிப்பது உன் வேலையல்லவா? ஊரெல்லாம் குழப்பம் என்பதை அறிவிக்க உன்னை தூக்கிக் கொண்டுதானே ஊர்வலம் போகிறார்கள்.. குழப்பத்தின் குறியீடே நீதான்.. நீ என்னை குழப்பம் விளைவிக்க வந்ததாய் சொல்கிறாயா? வேடிக்கை!..”

“ஆகா…! ஊரெல்லாம் சுற்றி வருபவனல்லவா நீ… அந்த அனுபவத்தில் ஆணவம் காட்டுகிறாயா என்னிடம்.. பேதைக் காக்கையே புத்தன் கூட சுற்றித்திருந்த வரை ஞானம் கைகூடவில்லை. ஓரிடத்தில் நிஷ்டை கொண்டபின்தான் ஞானம் பெற்றான். நீ சுற்றிச் சுற்றி உலகறிந்ததை விட ஓரிடத்தில் நின்று சிந்தையில் நான் அறிந்தது அதிகம். அதை மறந்துவிடாதே..”

“ஆமாம் ஆமாம் உன் சிந்தையை நிந்தை செய்ய என்னால் முடியுமா? அசைய முடியா அதிசய பறவையே.. நின்ற இடத்திலே ஞானம் பெற்ற மேதாவியே… ஒன்றைப் புரிந்து கொள்.. தங்கள் மூதாதையரின் பிரதிநிதியாக மட்டுமன்றி, எல்லாம் வல்ல சனிபகவானின் பிரதிநிதியாகவும் என்னை வணங்கி, என் வரவுக்காக காத்திருந்து, நான் உண்ட பின்புதான் இந்த மானிடர்கள் உணவையே உண்கிறார்கள் என்றால் என் சிறப்பை நீ உணர்ந்து கொள்ள வேண்டும்.”

“நல்ல பகிடி… பிரதிநிதியாரே… புரட்டாதி சனி தவிரத்து இன்னொரு நாளையேனும் யோசித்துப்பாரும். புரட்டாதி ஞாயிறை யோசியும்… கள்ளனான நீ எதையாவது களவெடுத்து விடுவாயோ என்று கல்லாலடித்துக் மனிதர்கள் கலைப்பதை மறந்துவிட்டாயா? வருடம் முழுவதும் கல்லடி வாங்கும் உனக்கு ஓரிரு நாட்கள் ஏதோ இரக்கம் காட்டினால் கடவுள் என்று உன்னை நினைத்துக் கொள்வாயோ?”

“போதும் நிறுத்து! உனக்கு என்மேல் என்ன பகை? இப்படி எதற்கு காற்றின் துணையோடு படபடத்துக் கொண்டே பேசுகிறாய்? நான் என்ன செய்தேன் உனக்கு? எதிர்ப்பின் அடையாளமாகவே மாறிவிட்டதால் எல்லோரையும் எதிரி என்றே நினைத்து பழகிவிட்டாயோ?”

“பின்னே நீ என்னுடன் நட்பு பாராட்டவா வந்தாய்? வந்ததுமே என் கொடிக்கம்பத்தை பங்கு போடுகிறாய்.. உன்னை எதிரி என்று உணராமல் நட்பு என நம்பி ஏமாறச் சொல்கிறாயா?”

“முட்டாளே! கரவா கரைந்துண்ணும் காக்கை நானாவேன். பகிர்ந்துண்பதே எம் மரபின் பழக்கம். அதை அறியமாட்டாயா நீ..”

“ஆமாம் ஆமாம் பகிர்ந்துண்பது உன் பழக்கம்தான்! ஆனால் நீ பகிர்வது உங்களிடத்தில் தானே. எங்கே உங்கள் எதிரி ஆந்தையுடன் பகிர்ந்துண்ணுங்கள் பார்ப்போம்.. பயந்து விலகியே விடுவாய். இப்போது என்னிடம் வீரம் பேசுகிறாய்”

“எம் எதிரியை பார்த்து நாம் அஞ்சுவது கூட நம் அறிவின் பலம் தான் பேதைக் கொடியே.. பகலில் பார்வை தெரியாத ஆந்தையை எம்மாலும் வெல்ல முடியும். நாம் கணம் பார்த்து பதுங்கியிருக்கிறோம். பயந்தல்ல. “பகல் வெல்லும் கூகையை காக்கை” என்று வள்ளுவரே கண்டறிந்து எழுதிவிட்டார். இது தெரியாமல் எம் பலவீனத்தை பற்றி பேசுகிறாய் நீ..”

“போதும் நிறுத்து .. உன் ஈனச் செயல்களுக்கும் தந்திரங்களுக்கும் விளக்கங்கள் எனக்கெதற்கு.. ஐந்தறிவு காக்கையே. உன் அறிவுத்திறன் கொண்டு என்னை முட்டாளாக்க முயலாதே. வடை சுட்ட பாட்டியை நீ முட்டாளாக்கியதால் நரி உன்னை முட்டாளாக்கிய கதையெல்லாம் உலகறியும். எப்போதும் அதி புத்திசாலி நீதான் என்ற எண்ணத்தை மாற்று . அஃறிணை நானாலும் என் பறத்தலில் இந்த சமூகத்திற்கு ஒரு செய்தி இருக்கிறது. இந்த சமூகத்தின் பெரிய மாற்றங்களின் முதல்புள்ளி நானாவேன்.”

“இதில் உனக்கு இத்தனை கர்வமா? ஏன் என் பறத்தலில் மட்டும் செய்தி இல்லையா? சென்று கேட்டுப்பார்.. என் கரைதல்தான் ஒவ்வொரு வீட்டிற்கும் இங்கு செய்தி சொல்லும். என் செயலெல்லாமே சமூகத்திற்கான எச்சரிக்கைதான். வானம் தோன்றிய காலம் தொட்டு சகுனம் சொல்லும் “சகுனப்புள்” தான் என் பெயரே..”

“என்ன தொன்று தொட்ட பெருமை பாடுகிறாயா? நான் சொல்லவா? கறுப்பிலும் நான்தான் தூய்மையானவன். பெருந்தலைவர்கள் பலர் என்னைத் தூக்கியே பல களங்களில் வெற்றி கொண்டுள்ளனர். என் புனிதம் உன்னிடம் இல்லை. உன்னிடம் பேசுவதில் கூட இப்போது என் புனிதம் கெடலாம்.”

“ஓகோ புனிதமானவரே.. நீ சொல்கிற பொருந்தலைவர்களின் சிலைகளின் சிரம்தான் இன்று பெரும்பாலும் என் கழிவறை.. உன் புனிதத்தை இதைவிடவா நான் கெடுக்க முடியும்..” கலகலவென கரைந்தது மீண்டும்.

பகை முற்றியது. காற்றும் பரபரப்பானது.

“போதும் நிறுத்து.. இப்போது சொல்கிறேன். என் கம்பத்தை விட்டு விலகிச் செல். உனக்கு இங்கு இடம் கிடையாது. வேறெங்காவது உனக்கேற்ற அழுக்குகளை போய் பற்றிக்கொள்..”

“அழுக்குகளையும் என் அலகு கொண்டு அழகாக்குபவள் நான்! உன்னைப் போல் அர்த்தமற்று எதற்கு பயனின்றி ஆடிக் கொண்டிருப்பவள் நானல்ல..”

கறுப்புகள் இரண்டுபட்டதால் காற்றுக்கு கொண்டாட்டம். இன்னும் ஆனந்தமாய் ஆவேசமாய் வீசியது.

கொடி வேகவேகமாய் படபடத்து கொடிக்கம்பத்தையே அசைக்க நினைத்தது. காகத்தை அப்புறப்படுத்த அது முயற்சித்துக் கொண்டேயிருந்தது.

“முட்டாள் கொடியே.. நான் நம்பியிருப்பது உன் கம்பத்தை அல்ல. என் சிறகுகளை.. என்னால் எக்கணத்திலும் இதிலிருந்து பறக்க முடியும். எந்த கம்பத்திலோ மரத்திலோ சென்றமர முடியும். நீதான் இந்தக் கம்பத்தை மட்டுமே நம்பியிருக்கிற ஜீவராசி. என்னை கலைப்பதாய் நினைத்து உன் ஆதாரத்தையே அழித்து விடாதே அமைதி கொள்... செல்ல முதல் இறுதியாய் ஒன்று சொல்கிறேன் கேள். என் சிறகுகள் என் சுதந்திரம்.. நீ உரிமை கொண்டாடுகிறாயே இந்தக் கொடிக்கம்பம் .. இது உன் சிறை! மறந்துவிடாதே..”

சொல்லிவிட்டு சிறகடித்துப் பறந்தது காகம்.

ஒரு வகையில் தோற்றுப்போன கண்களைப்போல் காகம் மறையும் வரை கொடி பார்த்துக் கொண்டேயிருந்தது.

காகம் பறந்து சென்றது. அதன் பாதை நீண்டு கொண்டே போனது. பெருங்கடல் பயணத்தில் அது அமர்வதற்கு சிறுதடி கூட ஏதுமில்லை. சிறகுகள் களைத்தன. இதோ இன்னும் சில நொடிகளில் காகம் கடலில் மூழ்கிவிடும். இன்னும் சில நொடிகள் தான்.

அடித்த காற்று பெருங்காற்றானது. அசைந்த கொடியின் வேகம் கொடிக் கம்பத்தையே பெயர்த்துவிட்டது. கடலில் மூழ்கி மிதந்து கொடி அலையோடு கலந்தது. எதிர்ப்பை காட்டும் கொடிக்கு எதிர்நீச்சல் தெரியவில்லை. ஊருக்கு சகுனஞ் சொன்ன பறவைக்கு தன் விதி புரியவில்லை.

இரண்டு கறுப்புகளும் பெருங்கடலில் சங்கமித்து மறைந்தன. இப்போது அலைகளின் தாலாட்டில் அந்தக் கடல் அமைதியாக உறங்கத் தொடங்கியது.

# குளிரூட்டும் சாதனங்களால் ஆபத்து

ஏர் கண்டிஷனர்கள் அதிக மின் சக்தி தேவைப்படும் சாதனங்கள். இதனால் இவற்றின் அதிக பயன்பாடு பருவநிலை நெருக்கடிக்கு (climate crisis) ஒரு காரணமாக அமைகிறது. இதன் மூலம் மீண்டும் காற்றில் அதிக வெப்பம் உருவாகும். இது ஒரு தீய சுழற்சியை உருவாக்குகிறது. 2050 ஆம் ஆண்டில், இந்தியாவில் ஏர் கண்டிஷனர்கள் பொருத்தப்பட்ட குடும்பங்களின் விகிதம் 10% முதல் 40% வரை அதிகரிக்கும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. புதுப்பிக்கத்தக்க மின்சார உற்பத்தி வழிகளை அதிகரிப்பதன் மூலமும், குறைந்த ஆற்றல் கொண்ட ஏர் கண்டிஷனர்களை உருவாக்குவதன் மூலமும், மற்றும் இதர குளிரூட்டும் தொழில்நுட்பங்களை பெருக்குவதன் மூலமும், இந்த தீய சுழற்சியை முடிவுக்குக் கொண்டு வர முடியும் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.



# வெற்றிகரமாக நடைபெற்ற பயிற்சிப் பட்டறை











**விழித்தவரெல்லாம் பிழைத்துக் கொள்வர்** எனும் செயற்திட்டத்தின் கீழ் அபயம், சிவபூமி, துமி அமைப்புகள் ஒன்றிணைந்து பாடசாலை தோறும் நடாத்திய கருத்தரங்குகளில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான இரண்டு நாள் பயிற்சிப் பட்டறையின் முதல் நாள் நிகழ்வுகள் யா.்.இராமநாதன் கல்லூரியில் 12.08.2023 அன்று நடைபெற்றன.

நேர் சிந்தனைகள் எவ்வாறு எங்கள் வாழ்வை முன்னேற்றும் என்பது தொடர்பாகவும், பாடசாலைப் பருவத்தில் கல்வி அதிலும் குறிப்பாக ஆங்கிலக் கல்வி எவ்வளவு முக்கியம் என்பது தொடர்பாகவும், சமூகவலைத்தளங்களுக்குள் அடிமையாகாது எவ்வாறு வினைத்திறனாக அவற்றை பயன்படுத்துவது என்பது தொடர்பாகவும், நாளாந்த கருமங்களை திட்டமிட்டு செய்யவேண்டியதன் அவசியத்தையும், எல்லாவற்றுக்கும் அடிப்படையாக உள்ள மனக் கட்டுப்பாட்டின் முக்கியத்துவத்தையும் எல்லோருக்கும் பொதுவான இறைவனை முன்னிறுத்தி ஆன்மீகச் சுடர். ரிஷி தொண்டுநாத சுவாமிகள் வழங்கியிருந்தார்கள். மிகவும் சுவாரசியமாக நடந்த இந்த கலந்துரையாடலில் மாணவர்கள் கேட்ட கேள்விகளுக்கும் சுவாமி பதில்களை வழங்கியிருந்தார்.

கட்டிளமைப்பருவத்தில் ஏற்படும் பாலியல் ரீதியான சவால்கள் மற்றும் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாவதற்கான சவால்களை மாணவர்கள் கையாளுதல் எனும் தொனிப்பொருளில் வைத்தியர் ரஜீவ் அவர்கள் மாணவர்களுடன் கலந்துரையாடினார்.









எமது மண்ணில் போதைப்பொருட் பாவனையின் இன்றைய நிலவரங்கள் பற்றியும், எவ்வாறு ஒருவன் தன்னை போதைப் பொருளுக்குள் இழக்கிறான் என்பது பற்றியும், போதைப்பொருள் சம்பந்தமாக சமூகத்தில் நிலவும் மௌனம் கலைக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும், போதைப்பொருள் பாவனையிலிருந்து மாணவர்கள் விலத்தியிருப்பதற்கான வழிவகைகள் பற்றியும், அவற்றில் பெற்றவர்கள் உள்ளிட்ட சமூகத்தின் வகிபாகத்தைப் பற்றியும் வைத்தியர். சிவகணேசன் அவர்கள் மாணவர்களுடன் கலந்துரையாடினார். சின்னப் பிரச்சினைகளுக்காக போதைப் பொருள் எனும் பெரிய பிரச்சனைக்குள் தாம் சென்றுவிடக்கூடாது என்பது தொடர்பான நல்ல வழிகாட்டலை அவருடனான கலந்துரையாடல் மூலம் தாம் பெற்றுக் கொண்டதாக மாணவர்கள் கூறினார்கள்.

இந்த நிகழ்வுகளின் சிறப்பம்சமாக பங்குபற்றிய மாணவர்கள் முழுமையாக தங்களை இந்த நிகழ்வுகளில் ஈடுபடுத்தியிருந்தார்கள். விடயங்களை முழுமையாக உள்வாங்கி இருந்தார்கள். ஒவ்வொரு வளவாளரின் கலந்துரையாடலின் நிறைவிலும் வெவ்வேறு பாடசாலை மாணவர்கள் யாவரும் ஒற்றுமையாக தாமாக எழுந்து, கரகோசத்தோடு வளவாளர்கள் தங்களுக்கு வழங்கிய பயிற்சிக்கு நன்றி கூறியமை அனைவரது கவனத்தையும் ஈர்த்தது. ஒவ்வொரு பாடசாலையிலும் நடைபெற்ற எமது விழித்தவரெல்லாம் பிழைத்துக் கொள்வர் கருத்தரங்குளின் போது தாமாக எம்முடன் இணைந்து பணியாற்ற முன்வந்த மாணவர்கள் இவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அதை நிறுவுவது போல் இவர்கள் செயற்பாடுகளும் இடம்பெற்றன. இங்கு பெற்ற வாழ்வியல் பயிற்சிகளை தங்கள் பாடசாலையிலும் தாங்கள் வாழும் சமூகத்திலும் கொண்டு சேர்க்க வேண்டும் என்பதில் இவர்கள் உறுதியாக இருப்பதை உணர முடிந்தது.

மீண்டும் மறுநாள் இறுதிநாள் பயிற்சிப்பட்டறைக்கு சகல மாணவர்களும் உரிய நேரத்திற்கு சமூகமளித்திருந்தமை அவர்களின் ஆர்வத்தை காட்டுவதாக இருந்தது.

மாணவர்களுடன் மிக உற்சாகமாக தனி நடிப்பு மூலமும், குழுச் செயற்பாடுகள் ஊடாகவும், வினாக் கொத்துப் படிவங்களை வழங்கியும் மதுபானங்களை எங்கள் வாழ்வில் தவிர்க்க வேண்டியதன் முக்கியத்துவத்தை யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவ பீட விரிவுரையாளர் திருமதி. ர. மைதிலி வழங்கியிருந்தார்.

எந்த ஒரு நிகழ்வுக்கும் ஆயத்தமாகும் போது ஒத்திகை பார்க்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும், அதிகரித்து வரும் தற்கொலைகளை தவிர்க்க எவ்வாறு எங்களை மனரீதியாக தயார் செய்ய வேண்டும் என்பது தொடர்பாகவும், நல்ல நண்பர்களைத் தேடிக் கொள்வதற்கான தேவையையும் பற்றி கலாநிதி செஞ்சொற்செல்வர்

ஆறு. திருமுருகன் அவர்கள் மாணவர்களோடு கலந்துரையாடினார். தெரிவு செய்யப்பட்ட இந்த மாணவர்களிடம் இந்த பயிற்சிப் பட்டறை மூலம் பெற்றுக் கொண்ட விடயங்களை பாடசாலையிலும், சமூகத்திலும் கொண்டு சேர்க்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

நாங்கள் எவ்வாறு எங்கள் நேரத்தை வீணாக்கிக் கொண்டிருக்கிறோம் மற்றும் எங்கள் நேரத்தை எவ்வாறு வினைத்திறனாக பயன்படுத்த முடியும் என்பது சமபந்தமாக புவியியல்த்துறை விரிவுரையாளர் திரு. இ. தனுசன் அவர்கள் மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

மாணவர்களை குழுக்களாக இணைத்து, அவர்களின் சிந்தனையாற்றலை தூண்டும் விதமாக ஒரு கலந்துரையாடலை வைத்தியர் ரஜீவ் அவர்கள் மேற்கொண்டிருந்தார். மாணவர்கள் ஆர்வத்துடன் அவர் வழங்கிய நடைமுறை பிரச்சனையிலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்வதற்கான வழிகளை வினைத்திறனாக முன்வைத்திருந்தார்கள்.

இருநாள் பயிற்சிப்பட்டறை தங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்ததாகவும், இதில் தாங்கள் கற்ற விடயங்களை சமூகத்திடம் கொண்டு சேர்க்க சகல வழிகளிலும் முயற்சிப்பதாக மாணவர்கள் உறுதியெடுத்துக் கொண்டார்கள். அதன் முதற்கட்டமாக பாடசாலை காலை பிரார்த்தனைகளில் இதனைப் பற்றி மற்றய மாணவர்களுடன் கலந்துரையாடுவதாகவும், சமூகத்தின் மௌனம் கலைக்க தாங்கள் முயல்வதாகவும் மாணவர்கள் கூறினார்கள்.

முதல்நாள் நிகழ்வுகளைப் போலவே மதிய போசனத்தோடு இறுதிநாள் நிகழ்வுகளும் அனைவருக்கும் மனநிறைவானதாக நிறைவு பெற்றன. பங்குபற்றிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. இந்த நிகழ்வுகளுக்கான அனுமதியினை வழங்கிய வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர், வடமாகாண கல்விப் பணிப்பாளர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர் உள்ளிட்ட வட மாகாண கல்வி அமைச்சிற்கும், தமது பாடசாலை மாணவர்களையும் ஆசிரியர்களையும் அனுப்பி வைத்த பாடசாலை அதிபர்களுக்கும், வருகை தந்த மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் எல்லாவற்றிற்கும் மேலாக நிகழ்வுகளுக்கான மண்டபம் உட்பட சகல வசதிகளையும் ஏற்படுத்தி தந்த யா.்.இராமநாதன் மகளிர் கல்லூரி அதிபர் உள்ளிட்ட பாடசாலை சமூகத்திற்கும், தமது பெறுமதிமிக்க நேரத்தையும் கருத்துக்களையும் மாணவர்களுக்கு வழங்கிச் சென்ற சிறப்புமிக்க வளவாளர்களுக்கும், நிகழ்வுகளை சிறப்பாக ஒழுங்கமைக்க ஆரம்பம் முதல் கடுமையாக உழைத்த நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

# வவுனியாவில் போதைப்பொருளை கொண்டு சென்றவருக்கு மரண தண்டனை





யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி விற்பனைக்காக 1கிலோ 135 கிராம் தூய்மையான ஹெரோயின் போதைப்பொருளை கொண்டு சென்ற குடும்பஸ்தருக்கு வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் மரணதண்டனை வழங்கி தீர்ப்பளித்தார். யாழ் நாவற்குழியை சேர்ந்தவரும், தற்போது வவுனியாவில் வசித்து வருபவருமான கந்தையா தியாகராஜா என்ற 55 வயது குடும்பஸ்தருக்கே 6 வருடங்களின் பின் இவ்வாறு மரண தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 09 திகதி வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையத்திற்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து, வவுனியா பொலிஸ் நிலைய பொலிஸ் பரிசோதகர் ராஜபக்ஸ தலைமையில் பொலிசார், அன்றைய தினம் இரவு 8.30 மணியளவில் வவுனியா பழைய பேரூந்து நிலையம் முன்பாக யாழில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற பேரூந்துக்ளை சோதனையிட்டனர். இதன் போது பேரூந்து ஒன்றில் பயணித்த குடும்பஸ்தர் தன் வசம் உடமையில் வைத்திருந்த பை ஒன்றில் இருந்து ஹெரோயின் போதைப் பொருள் கண்டு பிடிக்கப்பட்டது.


இதனையடுத்து ஹெரோயின் போதைப் பொருள் பொலிசாரால் மீட்கப்பட்டதுடன், அதனை உடமையில் வைத்திருந்த குடும்பஸ்த்தரும் கைது செய்யப்பட்டிருந்தார். இதனையடுத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டு வவுனியா நீதிமன்றில் வழக்கு விசாரணைகள் இடம்பெற்று விளக்கமறியில் இருந்து பிணையில் விடுவிக்கப்பட்டுருந்தார். குறித்த வழக்கு விசாரணைகளில் குறித்த நபர் ஒரு கிலோ 135 கிராம் தூய ஹெரோயினை உடமையில் வைத்திருந்தமை மற்றும் விற்பனைக்காக எடுத்து சென்றமை என்பன எந்தவித சந்தேகத்திற்கு இடமின்றி உறுதிப்படுத்தப்பட்டது. இதனையடுத்து சந்தேக நபருக்கு வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் மரண தண்டனை வழங்கி 12.07.2023 தீர்ப்பளித்தார்.







**போதைப்பொருளை தொட்டாலே ஆபத்து**



# அவர் நிறுவவில்லை.... உலகம் ஏற்கவில்லை....

## (நோம் ஷோம்ஸ்கியின் கதை)

தி. திவிகா
யாழ் பல்கலைக்கழக மாணவி

நோம் ஷோம்ஸ்கி நவீன மொழியியலின் தந்தை {Father of modern linguistic} என அழைக்கப்பட்டார். இவர் அமெரிக்காவைச் சேர்ந்த ஒரு மொழி மெய்யியலாளர் ஆவார். 1950 -1960 வரையிலான காலப்பகுதியினைச் சேர்ந்த உளவியலாளர் ஸ்கின்னரின் கற்றல் கொள்கையினை மறுத்துப் புதியதொரு கருத்தினைத் தெரிவித்த ஒரு மொழியியலாளராகப் பார்க்கப்பட்டார். அதுமட்டுமன்றி பகுப்பாய்வு மெய்யியலில் மொழியின் தெளிவின்மை மற்றும் தவறுதலான எடுத்துரைப்புக்கள் பற்றிய கருத்துக்கள் காணப்பட்டது. இதனடிப்படையில் மொழியினை தெளிவுபடுத்தும் நோக்கில் எழுந்ததே பகுப்பாய்வு மெய்யியலாகும். இந்தவகையில் பகுப்பாய்வுச் சிந்தனையாளர்களுள் இவரையும் ஒருவராக பார்க்க முடியும்.

ஷோம்ஸ்கி இருவகையான மொழிசார் கருத்துநிலைகளைக் கொண்டு காணப்பட்டார். மனிதர்கள் எந்தவொரு மொழியையும் கற்க உதவும் ஒரு உள்ளார்ந்த மொழி சாதனத்துடன் பிறக்கிறார்கள் (Chomskys theory of language acquisition) என்பது ஒன்று. மற்றையது உலகளாவிய இலக்கணக்கோட்பாடு (Universal grammar) ஆகும். ஷோம்ஸ்கியின் இவ்விரு மொழிசார் கருத்துநிலைகளை தெளிவாக நோக்குவது அவசியமானது.


மனிதர்கள் எந்தவொரு மொழியையும் கற்க உதவும் ஒரு உள்ளார்ந்த மொழி சாதனத்துடன் பிறக்கிறார்கள் என்பது நோம் ஷோம்ஸ்கியின் கருத்தாகும். இவருடைய கருத்துப்படி மனிதனது மூளையின் கட்டமைப்புக்கள் இயற்கையாகவே மொழியினைக் கற்கும் மற்றும் மொழியினைப் பயன்படுத்தும் திறனை அனுமதிக்கிறது. இக்கருத்து நிலையினை 1950களின் முற்பகுதியிலிருந்து வெளிடத்தொடங்கியுள்ளார். LAD (Language Acquisition Device) எனும் மொழியைக் கையகப்படுத்தும்

சாதனம் மூளையில் இருக்கிறது எனத் தெரிவித்திருந்தார். மனிதர்கள் LAD மூலமே மொழியினை கற்கும் உள்ளார்ந்த திறனை குழந்தைப் பருவத்திலிருந்தே பெற்றுக்கொள்கிறார்கள் என ஷோம்ஸ்கி குறிப்பிட்டிருந்தார். மனிதனது ஆரம்ப வளர்ச்சி நிலைகளில் ஒன்றான குழந்தைப் பருவத்திலே குழந்தைகள் அவதானித்தல், சத்தம் போடுதல், சிரித்தல், அழுதல் போன்றவற்றின் மூலம் இயல்பாகவே மொழியியல் ரீதியாக வளர்கிறார்கள் என்றார். இக்குழந்தைப் பருவத்தில் சுற்றுச்சூழல் தூண்டுதல்களால் குழந்தைகளது மொழியியல் ரீதியான உள்ளார்ந்த அம்சம் செயற்படுகிறது என வாதாடினார்.

ஆரம்பத்தில் மேற்கூறியது போல் தமது மொழியியலினை கற்றுக்கொள்ளும் குழந்தைகள் வளர்ந்து வரும் காலப்பகுதிகளில் சொற்கள், சொற்றொடர்களைக் கற்று செய்திகளைத் தெரிவிக்கும் திறனையும் வெளிப்படுத்துகிறார்கள். குழந்தைகள் வளரும் சூழலின் பரிணாம வளர்ச்சியின் காரணமாக இது நிகழ்கிறது என்பதே ஷோம்ஸ்கியின் சிந்தனைப்போக்காகும்.

எடுத்துக்காட்டாக, ஜேர்மன் இனத்தைச் சேர்ந்த ஒரு குழந்தை அமெரிக்காவில் வளர்க்கப்பட்டு அங்கு ஆங்கிலம் பேசும் மக்களால் சூழப்பட்டிருந்தால் அந்தக் குழந்தையும் ஆங்கிலத்தில் பேசும். இதற்குக் காரணம் LAD சாதனமே ஆகும். இந்தவகையில் LAD சாதனம் மூலம் எந்தமொழியையும் கற்றுக்கொள்ள முடியும் எனக் குறிப்பிட்டுள்ளார். தமிழ் பேசும் பெற்றோருக்கு ஆங்கில தேசம் ஒன்றில் குழந்தை பிறந்து அந்நாட்டிலே வசிக்குமானால் அக்குழந்தை ஆங்கிலம் பேசக்கூடியதாகவும் அதே சமயம் பெற்றோரால் தமிழ் கற்பிக்கப்பட்டால் தமிழும் பேசக்கூடியதாயும் உள்ளமையினை நடைமுறையில் காண்கின்றோம். ஷோம்ஸ்கியின் சிந்தனைப்படி ஒருவர் ஒரு மொழியினை மட்டும்தான் கற்றுக்கொள்ளக் கூடியவரல்ல. மாறாக ஒரு நபரால் அனைத்து மொழிகளையும் கற்றுக்கொள்ள முடியும். இச்செயன்முறை இயற்கையாகவே மனிதனிடம் காணப்படும் ஒரு அம்சமாகவே காணப்படுகிறது என்ற முடிவிற்கு வரக்கூடியதாகவுள்ளது.

உலகளாவிய இலக்கணக் கோட்பாட்டில் (Universal grammar) ஷோம்ஸ்கி அனைத்து மொழிகளும் அதற்கென தனித்துவமான கட்டமைப்புக்கள் மற்றும் விதிகளைக் கொண்டுள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார். எடுத்துக்காட்டாக, பெயர்ச் சொற்கள், வினைச்சொற்கள் மற்றும் உரிச்சொற்கள் என சொற்களின் வகுப்புக்கள் உள்ளமையினைக் குறிப்பிடலாம். ஷோம்ஸ்கிஇ ஓர்



ஆங்கிலக் குழந்தை ஆங்கிலத்தை அறிந்து கொண்டுதான் பிறக்கிறது என்பதல்ல. மாறாக அனைத்து மானிட மொழிகளும் பொது இலக்கணக் கோட்பாடுகளை தமக்குள் பகிர்ந்து கொண்டுள்ளன. இந்தவகையில் அனைத்து மொழிகளும் பொருட்கள் மற்றும் செயல்களைக் குறிப்பிட பெயர்ச்சொற்கள் மற்றும் வினைச் சொற்கள் கொண்டுள்ளன எனவும் மொழிக் கற்றலில் குழந்தையின் பணி தான் கேட்டறியும் குறிப்பிட்ட மொழி இத்தகைய அடிப்படைக் கோட்பாடுகளை எவ்வாறு வெளிப்படுத்துகிறது என்பதை நிறுவுதலே என்றும் எடுத்துரைக்கிறார்.

மொழியின் மூலம் தகவல்களைப் பரிமாறிக்கொள்ள முயல்பவர்கள் பலவழிகளில் அதாவது கிடைத்திடக்கூடிய பல மொழிகளைப் பயன்படுத்துகின்றனர். இக்கண்ணோட்டத்தில் இருந்து பார்த்தால் மொழி இலக்கணம், விதிகளுக்கான திட்டவட்டமான அமைப்பைக் கொண்டிருக்க வேண்டும் என்றும் அது கணக்கிலடங்காத ஆழ்ந்த மற்றும் மேற்புறக் கட்டமைப்புக்களுடன் பொருத்தமாக தொடர்புபடுத்தப்பட்டிருப்பதும் புலனாகும். ஒவ்வொரு மனிதனும் வெவ்வேறுபட்ட பண்பாடுகளையும், நுண்ணறிவுகளையும் கொண்டிருந்தாலும் கூட அது மொழிகளின் கட்டமைப்புக்களைப் பாதிப்பதாகத் தெரியவில்லை. ஒவ்வொரு மொழியின் விதிமுறைகளும் பொதுவானவையாக கருதப்பட்டுள்ளது.



நோம்ஷோம்ஸ்கியின் மொழியியல் தொடர்பான கருத்தியல்கள் விமர்சனத்திற்குள்ளாக்கப்பட்டது குறிப்பிடத்தக்க விடயமாகும். ஷோம்ஸ்கியின் மொழி தொடர்பான ஆய்வுகள் கருத்தியல் நிலையிலே காணப்பட்டன. விஞ்ஞானிகள், உளவியலாளர்கள் போன்று பரிசோதனைகளை மேற்கொண்டு தன்னுடைய ஆய்வு முடிவுகளை உறுதிப்படுத்திக்காட்டவில்லை. குறிப்பாக ஷோம்ஸ்கி குழந்தைகளை வைத்து ஆய்வு எதனையும் மேற்கொள்ளவில்லை என்பது இவருடைய சிந்தனையை உறுதி செய்து கொள்வதில் சிக்கல்களை ஏற்படுத்துகிறது. ஷோம்ஸ்கியின் கோட்பாட்டில் குழந்தை மொழியினைப் பயன்படுத்தி பேசுகிறது என்பது பற்றிய கருத்தாக்கங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதே தவிர குழந்தை ஏன் பேச விரும்புகின்றது என்பதற்கான காரணங்கள் குறித்து கவனம் செலுத்தப்படவில்லை.

அனைத்து மொழிகளுக்கும் பொதுவான இலக்கணக்கோட்பாடு உள்ளது என்பதனை உண்மையில் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் உலகில் பல்வேறு மொழிகள் காணப்படுகின்றன. இவை அனைத்தும் ஒரேவகையினதான விதிமுறைகள் மற்றும் இலக்கணக்

கட்டமைப்புக்களைக் கொண்டுள்ளன என்பதனைக் கூறமுடியாது. எடுத்துக்காட்டாக, மேலைத்தேய மொழிகளிற்கு பொதுவான இலக்கணக்கோட்பாடு உண்டு என்பது ஓரளவு பொருத்தமுடையதாகவும் வேறு மொழிகளில் இக்கோட்பாட்டைப் பயன்படுத்துவதில் சிரமங்கள் ஏற்பதுவதனை குறிப்பிடலாம். அதுமட்டுமன்றி குழந்தைகள் ஒரு மொழியைக் கற்பது பற்றி ஷோம்ஸ்கியின் கோட்பாடு கூறிநிற்கிறதே ஒழிய இரண்டாவது மொழியைக் கற்பது பற்றி ஏதும் கூறவில்லை. மொழியொன்றைக் கற்பதில் ஒத்த கூறுகள் உள்ளடங்கியுள்ளன என்ற கருத்தை பொதுவாக நோம்ஷோம்ஸ்கி வலியுறுத்தியுள்ளார்.

ஸ்கின்னர் தன்னுடைய கற்றல் கோட்பாட்டினை நிறுவிக்காட்டுவதற்கு விலங்கில் பரிசோதனை செய்து கொண்டார். ஆனால் ஷோம்ஸ்கி எந்நவிதமான நிரூபணங்களையும் எடுத்துக்கொள்ளவில்லை. இதன் காரணமாகவே ஸ்கின்னரின் கற்றல்கொள்கை இன்றுவரை ஏற்றுக் கொள்ளப்பட்டு பின்பற்றப்பட்டு வருவதனைக் காணக்கூடியதாகவுள்ளது. ஷோம்ஸ்கியின் மொழியியல் ரீதியான சிந்தனைப் போக்கினை ஏற்றுக்கொள்வதில் முறையான நிரூபணங்கள் இல்லாமையினால் சிரமங்கள் உள்ளமையினைப் புரிந்துகொள்ளக் கூடியதாகவுள்ளது.

# சிறாருக்கு சீனாவில் கடும் சட்டம்



சீனாவில் செல்போன்களை குழந்தைகள் பயன்படுத்த கடும் கட்டுப்பாடுகளை விதித்து உள்ளது. இது தொடர்பாக சீனாவின் செல்போன் கட்டுப்பாட்டாளர் அமைப்பு நெறிமுறைகளை வகுத்துள்ளது. 18 வயதுக்குட்பட்டவர்கள் ஒரு நாளைக்கு அதிகபட்சமாக 2 மணி நேரம் மட்டுமே செல்போன் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும். மேலும் 8 வயதிற்குட்பட்ட குழந்தைகள் ஒரு நாளைக்கு 40 நிமிடங்களும், 8 முதல் 16 வயதுக்குட்பட்ட குழந்தைகள் ஒரு மணி நேரமும் 16 முதல் 17 வயதுக்குட்பட்டவர்கள் 2 மணி நேரம் செல்போனை பயன்படுத்த அனுமதிக்கப்படுவார்கள். 18 வயதுக்குட்பட்டவர்களுக்கு இரவு 10 மணி முதல் காலை 6 மணி வரை ஸ்மார்ட்போனில் எந்தவிதமான சேவையும் வழங்கப்பட கூடாது. 18 வயதுக்குட்பட்டவர்கள் மொபைல் சாதனங்களில் இரவு 10 முதல் காலை 6 மணி வரை இணையத்தை பயன்படுத்துவதை தடுக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சைபர் பேஸ் அமைப்பு தெரிவித்து உள்ளது. குழந்தைகளின் வயதை உறுதி செய்வதற்கான அமைப்பும் ஸ்மார்ட்போனில் இணைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

# ஒன்று பட்டால்....
# [ஒன்றுபட்டால்...]

ஒன்று என்பதென்னவோ
எண்ணாய், எண்களின் முதல்வனாய்
எதிலுமே முதலாய் எண்ணப்பட்டாலும்
ஒருதலைக்காதலாய்.....
ஒருகை ஓசையாய்.....
ஒற்றைப்படையாய்.....
ஒருத்தரைப் பற்றியே.....
ஒருத்தரின் பற்றையே.....
ஒருத்தரின் விருப்பையே.....
ஒருத்தரின் மறுப்பையே.....
ஒருத்தரின் கருத்தையே.....
ஒருத்தரின் நலத்தையே.....
ஒன்று... ஒரு.... ஓர்.. - என
ஒன்றை மட்டுமே குன்றென எண்ணி
குன்றல் ஏதுமின்றி குடியிருப்போரே!



ஒருகை ஓசை ஒலிப்பதும் இல்லை..
ஒன்று தனித்திங்கு வென்றிடல் எளிதுமில்லை.....
வாழ்ந்திடும் போதும் வீழ்ந்திடும் போதும்
பாங்காய்க் கரங்கள் தாங்கிட இங்கு
நால்வரையேனும் நன்றாய் சேமித்து
நலமாய் நடந்திட......
ஒன்றைப் படச்செய்து
ஒன்றுகள் பலதும்
ஒன்றிணைந்திட்டால்

பிரசாந்தி ஜெயபாலன்

கந்சிலைமடு தாரு
-எழுத்தாளர்-

# வயற்காடு...!

(சிறுகதை)



நேற்றுப் பின்னேரம் சூரியன் மெல்ல மெல்ல மறையத் தொடங்கிய நேரம். வீட்டு முற்றத்துக் கதிரையிலிருந்து கண்ணில் படும் காட்சிகளைப் பார்த்து இரசித்துக் கொண்டிருந்தேன். பறவைகள் தம் தொழில் முடித்துக் கூடுகளுக்கு விரைந்து கொண்டிருந்தன. விவசாயிகளும் வயல் வேலைகளை முடித்துவிட்டு மாட்டு வண்டில்களில் வீடு திரும்பிக் கொண்டிருந்தார்கள். தொலைவிலே மாடுகளைச் சாய்த்துக் கொண்டு ஐயா ஒருவர் பட்டியை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தார். சூரியனும் மறைந்து இருள் கௌவியது. இப்போதுதான் அப்பாவும் வயல் வேலைகளை முடித்துவிட்டு வீட்டிற்கு வந்திருந்தார்.

“தம்பி வண்டில்ல மம்பட்டி கிடக்கு அதக் கீழ எடுத்து வைச்சிட்டு, மாட்டக்கொண்டுபோய் பட்டீல கட்டீற்று வா...”

அப்பா கூறும் சத்தம் கேட்டது. நானும் எழும்பி மாட்டை அவிட்டுப் பட்டியில் கட்டிவிட்டு வந்தேன். அப்பா குளிப்பதற்காகக் கிணற்றடிக்குச் செல்லுவது விளங்கியது. நானும் அப்பாவின் சாறத்தையும், துவாயையும் எடுத்துக்கொண்டு சென்று கிணற்று வளையில் போட்டுவிட்டு வந்தேன். குளித்துவிட்டு வந்தவர் அவசரமாக எங்கேயோ போவதற்கு வெளிக்கிட்டார்.

“அப்பா எங்க இவ்வளவு வேகமா வெளிக் கிடுறிங்கள்?”

அப்பாவின் அருகில் சென்று மெல்லக் கதைகேட்க ஆரம்பித்தேன்.

“தம்பீ.... அவசரமா ஒருக்கா கொழும்புக்குப் போகோணும்... பத்து மணிக்கு கொழும்பு பஸ் இருக்காம்.. அதுதான் கடையடியில் விசாரிச்சுட்டு வரப்போறன்...”

“எதுக்கப்பா கொழும்புக்கு?”

“என்ரை ஐசி புதுப்பிக்க பதிஞ்சு அனுப்பினான். கனநாளா வரேல... இண்டைக்கு விடிய கோல் எடுத்து, போம் நிறப்பினதில ஏதோ பிரச்சினயாம்.. நாளைக்கு வந்து அதக்கிளியர் பண்ணீட்டு அப்பிடியே ஒருநாள் சேவையில எடுக்கட்டாம் எண்டு சொன்னவங்கள்...”

“அப்ப நீங்க போனா இண்டைக்கு யாரப்பா வயல்ல காவல்?”

“அதான் தெரியேலடா அப்பு... பக்கத்துக் காணிக் காரன் நாதனும் வரமாட்டானாம் எண்டு சொன்னவன்.... இவளோ நாளும் காவல் காத்திட்டு இண்டைக்குப் போகாட்டி கஸ்ரம்.... யானை இறங்கீற்றெண்டா கொஞ்ச நேரத்தில வயல நாசம் கட்டீடும். என்ன செய்யிற எண்டு தெரியாமக் கிடக்கு...”

“அப்பா நான் இண்டைக்குக் காவலுக்குப் போகட்டே?... பக்கத்துக் கொட்டில்ல ஆக்கள் நிப்பினதானே.... பயம் இல்லப்பா.....”

“என்ன சொல்லுறாய்... நித்திர கொள்ளாம இருக்கோணும்... கவனமாக் கிடப்பியே... பண்டியளும் இறங்கும் கவனம்!”

“ஓமப்பா... தீவறை மூட்டுவன்தானே... அப்ப ஒண்டுக்கும் பயப்பிடத் தேவேல்லப்பா..... தீப்பந்தம் மற்றது யான வெடியளும் கிடக்குத் தானேப்பா... நான் பாத்துக் கொள்ளுவன் நீங்க வெளிக்கிடுங்கோப்பா...”

“ம்... சரி... சரி... அம்மாட்டச் சொல்லிச் சாப்பாட்டக் கட்டிக்கொண்டு வெளிக்கிடு.... தீவறைக்கு விறகெல்லாம் எடுத்துப் போட்டிற்றுத்தான் வந்தனான். போனோடன தீவறைய மூட்டீற்றுப் பறனில ஏறியிருந்து லைற்றடிச்சுப் பாத்தி யெண்டா ஏதும் இறங்கினாத் தெரியும்....”

அப்பாவின் அறிவுறுத்தல்களைக் கேட்டபடியே நான் வயலுக்குப் போகத் தயாராகினேன். அம்மா கட்டித் தந்த சாப்பாட்டுப் பார்சலையும் எடுத்துக்கொண்டு லைற்று, போர்வை என எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு வயலை நோக்கிச் சைக்கிளில் புறப்படத் தொடங்கினேன்.

“தம்பீ... கவனமாக் கிடக்கோணும்.... லைற்ற வடிவாக் காலடிக்குப் புடிச்சுப் போகோணும்....”

பின்னால் அம்மாவின் சத்தமும் ஒலித் தோய்ந்தது. காட்டினை ஊடறுத்த ஒற்றையடிப்பாதை. அந்தப் பாதையில்தான் நான் செல்ல வேண்டும். அப்பாதையின் இருமருங்கும் ஓங்கி வளர்ந்து நிற்கின்ற அடர்ந்த மரங்கள். அவற்றில் இருக்கும் குரங்குகள், கிளைகளில் பாய்ந்து திரியும்

சத்தம் கேட்டுக்கொண்டிருந்தது. காட்டுப் பறவைகளின் சத்தமும், தொலைவிலே நரிகள் ஊளையிடும் சத்தமும் கேட்டுக்கொண்டிருந்தன. எங்கோ யானைகள் பிளிறும் சத்தமும் என் காதில் விழுந்தது. அவை அனைத்தையும் கேட்டபடியே நான் வயலுக்குச் சென்று கொண்டிருந்தேன். மனம் பயத்தால் பதறியபடியிருந்தது. வந்த வழியைத் திரும்பிப் பார்த்தேன். என் பின்னால் யாருமே வரவில்லை. என் முன்னால்கூட யாருமே செல்லவில்லை. என் இதயம் பயத்தால் வேகமாகத் துடித்துக்கொண்டிருந்தது.

“பிள்ளையாரப்பா நீதானப்பா காப்பாத் தோணும்..”

என்று பிள்ளையாரப்பாவை நினைத்துக் கொண்டு வேகமாகச் சைக்கிளை உழக்கிக் கொண்டிருந்தேன். வானத்திலே பௌர்ணமி நிலவும் எறித்துக் கொண்டிருந்தது. அது வான் மேகங்களைக் கிழித்துக்கொண்டும் பயணித்துக் கொண்டிருந்தது. அவ்வெளிச்சத்தின் உதவியுடன் சற்றுநேரத்தில் வயலை அடைந்து விட்டேன். வயலை அடைந்ததும்தான் தாமதம் தொலைவிலே யானை பிளிறும் சத்தமும் ஒலித் தோய்ந்தது. சைக்கிளைப் பாலை மரத்தில் சாத்திவிட்டுப் பயத்துடன் காவல் குடிலை நோக்கி நடந்தேன். அந்த நிலா வெளிச்சத்தில் காவல் குடில் தெளிவாகவே தென்பட்டுக்கொண்டிருந்தது. அது காட்டு மரங்களால் அமைக்கப்பட்டு தென்னோலையால் மேயப் பட்டிருந்தது. அக்கொட்டிலுக்குள் மழை நேரங்களில் படுப்பதற்காகப் பறனும் அமைக்கப்பட்டிருந்தது.

நான் கொண்டு வந்த சாப்பாட்டுப் பையைப் பறனில் வைத்துவிட்டுத் தீவறையை மூட்டத் தொடங்கினேன். திடீரென மேலே கூரைக்குள் ஏதோ சத்தம் கேட்டாற்போல் இருந்தது. உடனே லைற்றை எடுத்து அடித்தபடி மேலே அண்ணாந்து பார்த்தேன். சாரைப்பாம்பொன்று கொட்டில் முகட்டுக்குள் சுருண்டு நெளிந்துகொண்டிருந்தது. அதன் வாயில் எலியொன்று அகப்பட்டிருப்பதும் தெரிந்தது. எனக்கோ பெரும் பயம் கிளம்பியது. உடனே அங்குமிங்கும் பார்த்தேன். உடல் பதறியது. அருகிலே அவசரத்திற்குத் தடிகள் கூடத் தென்படவில்லை. பாய்ந்து சென்று தீவறை மூட்ட அருகில் கிடந்த பெரிய விறகுத் தடியை எடுத்துவந்து அண்ணாந்து பார்க்கும்போது, பாம்பையே காணவில்லை. எனக்கோ பெரும் அச்சம் கிளம்பியது.

“கடவுளே என்ன கோதாரியப்பா... எனக்கு வந்த சோதினை..”

என்று மனதுக்குள் நினைத்தபடி விறகுத் தடியால் கிடுகுச் செத்தைகளைக் குத்திக் குத்திப் பார்த்தேன். ஒரு சத்தமும் இல்லை. பறனுக்குக் கீழே போத்தலில் வைத்திருந்த தீவறை மூட்டும் மண்ணெண்ணையை எடுத்து முகட்டிலும், வளைகளிலும், கூரைகளிலும் தெளித்துவிட்டுப் போத்தலை மூடியபடி கீழே குனிந்தேன். அருகில் ஏதோ விழுந்தது

போன்ற உணர்வு. பதறியபடி திரும்பினேன். பாம்பு எலியை விழுங்கியும் விழுங்காமலும் இருந்த நிலையில் வயலுக்குள் வேகமாய் நகர்ந்து மறைந்தது. இப்போதுதான் என் மனதுக்குள் ஒரு வித நிம்மதி பரவியது. இல்லையென்றால் இரவிரவாக எப்படிப் பறனில் கிடந்திருப்பேன்? தீவறை நெருப்படியில்தான் குந்திக் கொண்டு இருந்திருக்க வேண்டியிருக்கும்.

பாம்பைக் கண்டதிலிருந்து அடிக்கடி அங்குமிங்கும் லைற்றை அடித்துப் பார்த்தபடி தீவறை வெப்பத்தில் குளிர்காய்ந்து கொண்டிருந்தேன். முன்னிரவு நேரம் ஆகையால், பால் நிலா வெளிச்சம் பரவிக் கொண்டிருந்தது. பனியும் பொழிய ஆரம்பித்து விட்டது. தொலைவுகளில் உள்ள கொட்டில்களில் எரியும் தீவறை வெளிச்சங்களும், காவல்காரர்கள் அடிக்கும் லைற் வெளிச்சங்களும் தென்பட்டுக் கொண்டிருந்தன. பொழுதும் போகவில்லை.

“போன பாம்பு திரும்பியும் வந்திடுமோ?...”

என்று மனதில் அடிக்கடி நினைத்துக் கொண்டேன். இப்போது வீட்டில் இருந்திருந்தால் “பாக்கியலட்சுமி” நாடகம் பார்த்துக் கொண்டிருப்பேன். “என்ன செய்யலாம்?” என்ற நினைப்போடு பறனைக்கூட்டி, விரிப்பினை விரித்துவிட்டுக் கூரையை நோட்டமிட்டேன். அப்பாவின் பழைய சொனி ரேடியோ ஒன்று கொட்டில் கப்பில் கொழுவிக் கிடந்தது. ரேடியோவை இயக்கினேன். “வசந்தநிலா” நிகழ்ச்சியில் இனிமையான இடைக்காலப் பாடல்கள் போய்க்கொண்டிருந்தன.

“பாடல்களோடு இரவைக் கழிக்க வேண்டியதுதான்...”

என்று நினைத்துக்கொண்டு மீளவும் தீவறை வெப்பத்தில் உடலைச் சூடேற்றிக் கொண்டிருந்தேன். பொழுதும் நகர்ந்து கொண்டிருந்தது.



பாடல்களை இரசித்தபடி மனக்கண்களில் வந்த காட்சிகளையும் இரசித்துக்கொண்டிருந்தேன். வானத்து நிலாவும் ஆங்காங்கு தெரியும் நட்சத்திரங்களும் கருமுகில்களைக் கிழித்துக்கொண்டு எங்கோ வேகமாய் நகர்வதுபோன்று இருந்தன. சுய நினைவுக்கு வந்தவனாய் வானத்தை மீளவும் நோட்டமிட்டேன். தொலை வானிலிருந்து கருமுகில்கள் கூடி ஒளியை மறைக்கத் தொடங்கின. கூதற் காற்றும் பலமாக வீசத்தொடங்கியது. நான் உடனே பறனுக்குக் கீழே இருந்த தறப்பாளை எடுத்துக் கூரைக்கு மேலே போட்டுக் கட்டினேன். காற்றோடு மழைவந்தால் குடில், ஒழுக்காலும் தூவானத்தாலும் நனைந்துவிடும். நானும் உள்ளே இருக்க முடியாது. தறப்பாளைக் கட்டிக்கொண்டிருக்கும்போதே மழை தூறத் தொடங்கியது. தீவறையைக் குடிலுக்குள் அரக்கி மூட்டிவிட்டுப் பறனில் ஏறிக் குந்திக்கொண்டேன். மழையும் பொழியத் தொடங்கியது. காற்றும் பலமாக வீசி நடுங்கவைத்துக் கொண்டிருந்தது. அருகிலே நின்றிருந்த பாலைமரக் கிளைகள் பலத்த காற்றினால் முறிந்து விழும் சத்தமும் கேட்டது. லைற்றை அடித்துப் பார்த்து அதை உறுதிப்படுத்திக்கொண்டேன்.

“பிள்ளையாரப்பா.... தனியக் கிடக்கிறன்.... ஒண்டும் ஆயிடக்கூடாதப்பா...”

என்று என் ஊர்ப் பிள்ளையாரை நினைத்துக்கொண்டேன். ஓங்கி அடித்த மழை சற்றுக் குறைவது தெரிந்தது. அதற்கிடையில் கட்டிக்கொண்டு வந்த சாப்பாட்டைப் பசியில்லாமல் வயிற்றுக்குள் தள்ளிவிட்டுக் கையைக் கழுவிக்கொண்டேன். பயத்தில் எனக்கு அவ்வளவாகப் பசி எடுக்கவில்லை என்பது தெரிந்தது. தனிமைதான் பீதியைக் கிளப்பிக் கொண்டிருந்தது. மழைத் தூவானம் அணைத்திருந்த தீவறையைத் திருப்பவும் மூட்டியபடி வயலைச் சுற்றி லைற்றை அடித்து ஒரு நோட்டம் போட்டுக்கொண்டு, வானொலியில் போன பாடல்களை இரசிக்கத் தொடங்கினேன். பொழுதும் இரவு பத்தைக் கடந்திருக்க வேண்டும். மழையும் தூறியபடியே இருந்தது. காற்றும் சற்றுவேகம் குறைந்து குளிரைத் தந்து கொண்டிருந்தது. என்னையறியாமல் நித்திரை, தலையைத் தூக்கிப்போட்டுக் கொண்டிருந்தது. அப்படியே பறனில் ஏறிக் கிடந்துகொண்டேன். என்னை அறியாமலேயே இரவு நகர்ந்தது. என்னை அறியாமலேயே மழையும் பொழிந்துகொண்டிருந்தது. என்னை அறியாமலேயே குளிர்காற்றும் வீசிக்கொண்டிருந்தது. என்னை அறியாமலேயே இரவு பகலாய் மாறியது. தூக்கம் கலைந்து கண்விழித்தேன். என்ன ஆச்சரியம் சூரியக் கதிர்கள் தெறித்துக் கொண்டிருந்தன.

“என்னடாப்பா... அதுக்குள்ள விடிஞ்சிட்டு....”

என்றபடி பறனிலிருந்து இறங்கினேன். கால்கள் வெள்ளத்தில் நனைந்து மறைந்தன. அப்படியே வயலை எட்டிப் பார்த்தேன். எங்கும் வெள்ளம். பயிர்கள் வெள்ளத்துக்குள் மறைந்து

கிடந்தன. பயத்தில் அங்குமிங்கும் கண்கள் ஓடித்திரிந்தன. தொலையில் உள்ள வயல் குடில்களில் யாரும் தென்படுவதாய்த் தெரியவில்லை. எங்கும் வெள்ளக்காடாகவே இருந்தது. கடல் வெளியாய்க் காட்சி தந்தது. நான் பயந்து விட்டேன். எனக்கு என்ன செய்வதென்று கூடத் தெரியவில்லை. வெள்ளம் முழங்கால் மட்டத்திற்கு உயர்வாகவே இருந்தது. வயல் வரம்புகள் ஒன்றும் கண்களுக்குத் தென்படவில்லை. ஒருவிதமாகச் சாப்பாட்டுப் பையை எடுத்துக்கொண்டு, சைக்கிளையும் வெள்ளத்துக்கால் உருட்டியபடி வீதியை வந்தடைந்தேன்.

“பிள்ளையாரப்பா இண்டைக்கு வெள்ள மெல்லாம் வடிஞ்சிடோணும்... அப்பாவும் இல்ல... பின்னேரம் காவலுக்கும் வரோணும்...”

என்று மனதுக்குள் நினைத்தபடி வீட்டை நோக்கிச் சைக்கிளை மிதித்தேன். வெள்ளத்தின் யோசனையில் வந்ததால் வீடு வந்ததும் தெரியவில்லை.

“இண்டைக்கு என்ன நடக்கப் போகுதோ தெரியா... அப்பா வந்திட்டாரென்றாப் பிரச்சனை யில்லை.. நான் எப்படி உந்தத் தண்ணிக்கால வயலுக்குள்ள போறது? பாம்புகள் வேற பறனில சுருண்டு கிடந்தாலும் தெரியா...”

என்ற எண்ணத்துடன் சைக்கிளால் இறங்கி வீட்டுக் கடப்பைத் திறந்து உள்ளே சென்றேன். சட்டி, பானை கழுவிக் கொண்டிருந்த அம்மாவும் என் வரவைக் கண்டுவிட்டார்.

“தம்பி.. வந்திட்டியோடா.. வயலில எதும் நடக்கேல்லத்தானேயப்பு?... இரவிரவா நித்திரையும் இல்ல.. உன்ன நினைச்சுட்டுத்தான் இருந்தன்... என்னடாப்பு... வெள்ளமாம் எண்டு எல்லாரும் சொல்லீட்டுப் போறினம்.. அதுதான் யோசிச்சிட்டு இருந்தன்.... வற்றாப்பிள்ளைக்கு நான் வைக்காத நேத்தியில்ல... கடவுள்தான் நல்ல வழியத் திறக்கோணும்.... ”

“ஓமணே... இரவிரவா நல்ல மழையணே... விடிஞ்சதும் தெரியேல்ல... பறனில பேசாம ஏறிக் கிடந்திட்டன்.... முழங்கால் மட்டத்ததுக்குத் தண்ணியணே... பயிர மூடிப் பாயுது... மழை வராட்டிப் பின்னேரத்துக்கிடேல வடிஞ்சிடும் போலதான் கிடக்கு.... மற்றது, போனோடனயே குடில் முகட்டுக்க சாரப்பாம்பு வேற.... ஒருமாதி மண்ணெண்ணைய ஊத்திக் கலைச்சிட்டுத்தான் மற்ற வேலையளப் பாத்தது....”

“பாத்தியே அதுதான் பயம்.. பாம்பு பல்லியளெண்டு கொட்டிலுக்குள்ளதான் ஏறிக் கிடக்குங்கள்... கவனமாத்தான் பாத்துப் பறனில இருக்கோணும்... அதுதான் இரவும் பயந்தனான். யானையளும் இறங்கினாத் தனிய என்னதான் செஞ்சிருப்பியோ?.... இண்டைக்கு அப்பா வந்திட்டேரெண்டாப் பறவாயில்ல... எல்லாம் வற்றாப்பிள்ள ஆச்சிதான் பாத்துத் தரோணும்... வாற வைகாசிக்குப் போய் பொங்கலும்

போடோணும்…”

“ஓமணே.. இண்டைக்கு அப்பா வந்திட்டே ரெண்டாப் பறவாயில்ல…. கொஞ்ச நேரத்தால போன் அடிச்சுப் பாருங்கோம்மா…”

“ம்… சரி தம்பி நீ போய் கை, காலக் கழுவீட்டு வா.. தேத்தண்ணி வைச்சுத் தாறன்…”

அம்மாவுடன் கதைத்துக்கொண்டே சைக்கிளை மாமரத்தில் சாத்தினேன். சைக்கிள் கான்ரிலில் தொங்கிய சாப்பாட்டுப் பையை முற்றத்தில் இருந்த கதிரையில் எடுத்து வைத்துவிட்டுக் குந்தில் கிடந்த பற்பொடியை எடுத்துப் பல்லை மினுக்கிக் கொண்டு கிணத்தடியை நோக்கிப் பயணித்தேன். முகம் கழுவ வாளியில் தண்ணியள்ளியபடி,

“இரவிரவா உந்த வயல் சுணேக்க கிடந்தது…. வெள்ளத்துக்கால வேற வந்தது.. ரெண்டு வாளிய வாத்திட்டுப் போவம்.”

என்று நினைத்துக்கொண்டு ஐஞ்சாறு வாளித் தண்ணீரை மேலில் வாத்துவிட்டு வந்தேன். வந்தனான் சுவாமி அறைக்குச் சென்று,

“அப்பனே சிவசிவா…”
என்று மனதுக்குள் சிவனைக் கூப்பிட்டபடி திருநீறைச் சாத்திவிட்டுக் குசினிப் பக்கம் வந்தேன். என் மனதிற்குள் வயலின் நினைவுகளே ஓடிக்கொண்டிருந்தன. அம்மா தந்த றொட்டித் துண்டைச் சாப்பிட்டபடி தேனீரைக் குடித்துவிட்டுச் சுவரிலிருந்த மணிக்கூட்டைப் பார்த்தேன். மணி இப்போது ஏழைத் தாண்டிக்கொண்டிருந்தது.

“அம்மா ஏழுமணியாகீட்டு… சாப்பாட்ட வேகமாக் கட்டித்தாணே…”

என்றபடி ஓடிச்சென்று பள்ளிக்கூடத்திற்கு வெளிக்கிட்டுப் புத்தகப்பையை எடுத்துக்கொண்டு வெளியே வருகையில், சாப்பாட்டுப் பார்சலையும், தண்ணிர்ப் போத்தலையும் அம்மா, கொண்டுவந்து புத்தகப்பைக்குள் வைத்துவிட்டார். வைத்ததும் தான் தாமதம்,

“அம்மா பாய்…. பாய்…. அப்பாவோட கதையுங்கோ மறக்காம…”

என்று கத்தியபடி மாமரத்தில் சாத்திக் கிடந்த சைக்கிளை எடுத்துக்கொண்டு பள்ளிக்கூடத்தை நோக்கி மிதிக்கத் தொடங்கினேன்.

“ஓமப்பு… பாய்…பாய்… கவனமாப் பாத்துச் சிலோவாப் போவப்பு…”

என்று அம்மா கூறுவது என் காதுகளுக்குக் கேட்டது. பள்ளிக்கூடம் வழமையாகவே நகர்ந்தாலும் என் மனம் அமைதியிழந்திருப்பதை உணர்ந்தேன். வயலின் நினைவுகள் மனதில் வந்து வந்து போனபடியே இருக்க, ஒருமாதிரி எப்போது பள்ளிக்கூடம் விடும்? என்ற நினைப்பில் அன்றைய பாடங்களை விருப்பமின்றியே படிக்கவேண்டியிருந்தது. அம்மா தந்த சாப்பாட்டையும் என் நண்பர்களே உண்டார்கள். வயலில் நடந்த

நிகழ்வுகளை என் நண்பர்களிடம் கூறி ஆறுதல் தேடிக் கொண்டேன். பள்ளி முடியும் மணி ஒலித்ததும்தான் தாமதம், சற்றும் தாமதிக்காமல் சைக்கிளை எடுத்து மிதித்தபடி வீட்டை நோக்கிப் புறப்பட்டேன். அப்பா வந்திருப்பார் என்ற நினைப்பே மனதில் இருந்தது. வீட்டிற்குச் சென்றவுடன்தான் அப்பா வரவில்லை என்பது தெரிந்தது.

“அம்மா... அம்மா.....அப்பா போன் எடுத்தவரா?...”

“விடிய எடுத்தனான் கோல் தூ க்கேல்ல... ஏதும் அலுவலா நிண்டிருப்பேரோ தெரியா.. பேந்து நான் திருப்பி எடுக்கேல்ல... பாத்திட்டு எடுப்பே ரெண்டு விட்டிற்றன்...”

என்றபடி அடுப்படிக்குள்ளிருந்து அம்மா வெளியேறினார்.

“அப்ப திருப்பி ஒருக்கா எடுத்துப் பாப்பமணே.... இண்டைக்கு வாரேரோ எண்டு கேளுங்க....”

“முதல் சாப்பிடு... பிறகு எடுத்து கதைப்பம்.. வா.. வா... கை, கால்களக் கழுவீட்டு வா...”

என்றபடி அம்மா மீண்டும் குசினிக்குள் சென்றார். எனக்குச் சாப்பாடு போடுவதற்காகவே அவர் குசினிக்குள் செல்வது எனக்குப் புரிந்தது. நானும் கழுசான்களை கழற்றிக் கொடியில் பொட்டுவிட்டுக் கை, கால்களைக் கழுவிவந்து அம்மா போட்டுத் தந்த சாப்பாட்டை உண்டேன். என்னவோ தெரியவில்லை. இன்று பள்ளிக்கூடத்திலும் சாப்பிடவில்லை. ஆனாலும் இப்போதும் பசிக்காமலே இருந்தது.

“அப்பா ஏன் போன் எடுக்கேல்ல?”

“முதல்ல நீ கதைக்காமச் சாப்பிடு... பேந்து கோல் எடுத்துப் பாப்பம்..”

நான் அப்பாவுக்குக் கோல் எடுக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பில் அம்மா போட்டுத் தந்த சாப்பாட்டைத் தின்றுவிட்டு எஞ்சியதை முற்றத்தில் வாய்பார்த்துக்கொண்டு நின்ற என் கண்ணமாவுக்கு வைத்துவிட்டு வந்தேன். கண்ணம்மாவும் வைச்ச சோற்றைத் தின்றுவிட்டு, என்பின்னாலேயே வாலையாட்டியபடி வந்து வீட்டு வாசலடியில் நின்றுகொண்டது.

சாப்பிட்ட கோப்பையை அடுப்படிப் பறனில் வைத்துவிட்டு, வீட்டு மேசையிலிருந்த போனை எடுத்து அப்பாவுக்குக் கோல் எடுத்தேன்.
“கலோ.... கலோ....”
என்று அப்பா பேசுவதற்கிடையில் நான் முந்திக்கொண்டேன்.

“அப்பா.. அப்பா... ஏனப்பா போனெடுக்கேல்ல?... ஐசி எடுத்தாச்சோப்பா?... எப்ப வாறியள்?...”

“ஓம் தம்பி... அம்மா எங்க?... இப்பத்தான் அலுவல முடிச்சிட்டு வெளியில வந்தனான். இனித்தான் பஸ் எடுக்கோணும்... உங்க வர எப்பிடியும் பன்ரெண்டத் தாண்டீரும் எண்டு நினைக்கிறன்....”

“அம்மா கிணத்தடியில உடுப்புத் தோச்சுக் கொண்டு நிக்கிறாப்பா… சாப்பிட்டீங்களோ?”

“இனித்தான் சாப்பிடோனும்.. என்ன தம்பீ… இரவு சரியான மழையாம்.. சரியான வெள்ளமெண்டு பக்கத்து வயல் குமார் போனெடுத்துச் சொன்னவன்… பகலும் மழையோ தம்பீ?..”

“ஓமப்பா.. இரவிரவாச் சரியான மழை… விடிய எழும்பீப் பாக்கிறன் சரியான வெள்ளம்…. வயலை எல்லாம் மூடிப் பாயுது… பேந்து மழை பெய்யேல்ல.. எப்பிடியும் இப்ப வடிஞ் சிருக்குமப்பா…”

“தம்பி… வெள்ளம் வடிஞ்சா இரவைக்குக் காவலுக்குப் போ… நான் இரவைக்கு வந்திடுவன் தானே…”

“ஓமப்பா… சரி போறன்…”

என்றபடி போனை நிப்பாட்டிவிட்டுப் போய் மாமரத்தில் கட்டியிருந்த அம்மாவின் சேலை ஊஞ்சலில் சரிந்தேன்… மாமரத்துக் குளிர்ந்த தென்றல் என்னைத் தாலாட்டித் தூங்க வைத்துக்கொண்டிருந்தது. பொழுதும் நகர்ந்து கொண்டிருந்தது. நேரம் மாலை நான்கு மணியிருக்கும்.

“தம்பீ தம்பீ…”

“என்னணே… நித்திர கொள்ளுறன் எழுப்பிறியள்…”

“ஒருக்கா வயலடிக்குப் போயிட்டு வாப்பா… வெள்ளம் வடிஞ்சிட்டோண்டு பாத்திட்டு வா செல்லம்…. அப்பா எனக்கு இப்ப போன் எடுத்துக் கதைச்சவர்.. பஸ் ஏறிட்டேராம்…. இஞ்ச வர நடுச்சாமம் ஆகுமெண்டு சொன்னவர்… வெள்ளம் வடிஞ்சா உன்னக் காவலுக்கு அனுப்பச் சொன்னவர்.”

“சரியணே… பாத்திட்டு வாறன்…”

மாமரத்தில் சாத்திக்கிடந்த சைக்கிளை எடுத்துக்கொண்டு வயலை நோக்கிப் புறப்பட்டேன். சூரியனும் தன் கதிர்களால் சூடேற்றுவதை இன்னும்தான் குறைக்கவில்லை. ஆனாலும் நேரம் மாலை நான்கைக் கடந்துகொண்டிருந்தது. வயலடிக்குச் சென்று பார்த்தபோது சற்று நிம்மதியாக இருந்தது. வெள்ளம் வடிந்திருந்தது.

“கடவுளே பிள்ளையாரப்பா…. நீதான் எல்லாத் துக்கும் துணையப்பா…”

என்றபடி மறுபடியும் வீட்டை நோக்கிப் புறப்பட்டேன். காட்டு வீதியில் வயல்களைப் பார்த்துவிட்டு வருபவர்களும், பார்க்கப் போய்க்கொண்டிருப்பவர்களுமே தென்பட்டனர். நான் வீட்டு வாசலில் சைக்கிளை நிப்பாட்டுவதை அம்மா கண்டு விட்டார்.

“தம்பீ என்னப்பு.. வெள்ளம் என்னமாதி…?”

“ஓமணே அம்மா… வெள்ளம் எல்லாம் வடிஞ்சிட்டு.. இரவைக்குக் காவலுக்குப் போகோணும்தான்… சாப்பாட்டக் கட்டுங்கோ… வெள்ளனப்

போனாத்தான் தீவறைக்குக் கொஞ்சம் விறகுகள் தேடலாம்."

என்னுடைய கதையைக் கேட்டபடி குசிக்குச் சென்றவர், என்னைத் திரும்பிப் பார்த்தபடி,

"தம்பி டேய்.... வெள்ளம் வடிஞ்சா நாதண்ணையும் லயலுக்குக் காவலுக்குப் போவாராம் எண்டு அப்பா சொன்னவர். ஏதும் பிரச்சினை எண்டா அவரக் கூப்பிடு என.."

"ம்... சரியணே..."

பொழுதும் சென்றுகொண்டிருந்தது. நானும் வயலுக்குப் போவதற்குரிய ஆயத்தத்தோடு எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு வாசலுக்கு வருகையில், அம்மாவும் சாப்பாட்டைக் கட்டிக்கொண்டு வந்து பைக்குள் வைத்து விட்டார்.

"சரியம்மா... நான் வெளிக்கிடுறன்... நாதண்ணை வீட்டபோய் அவரயும் பாத்திட்டுப் போறன்..."

என்றபடி கான்ரிலில் சாப்பாட்டுப் பையைக் கொழுவிவிட்டுச் சைக்கிளை மிதிக்கத்தொடங்கினேன்.

"தம்பி கவனமப்பு...."

என்று அம்மா சொல்லும் சத்தம் என் காதுகளுக்குள் விழுந்துகொண்டிருந்தது. போன வேகத்தில் கால்களால் பிறேக் பிடித்து நாதண்ணையின் வளவுவாசலில் சைக்கிளை நிப்பாட்டினேன்.

"நாதண்ணோய்... நாதண்ணோய்..."

"யாராடாப்பு?... வாவன் உள்ளுக்குள்ளை..."

சைக்கிளை உருட்டிக்கொண்டு வளவுக்குள் நுழைந்தேன்.

"அட நீயே.... கொப்பர் சொன்னவர்... தான் கொழும்பில நிக்கிறேராம்... நீதான் காவலாமெண்டு... சரி ஒண்டும் யோசிக்காத பக்கத்தில நாங்கள் இருக்கிறம்தானே... கொஞ்சம் பொறு.. சாப்பாட்டக் கட்டீற்று வெளிக்கிடுவம்."

என்றபடி வீட்டுக்குள் நுழைந்தவர், சிறிது நேரத்தால் தோளில் பை ஒன்றைச் சுமந்தபடி வெளியில் வந்தார்.

"சரியடாப்பு... நாங்க வெளிக்கிடுவமே?..."

"ஓமண்ண வெளிக்கிடுவம்.."

என்று அவருக்குப் பதில் சொன்னபடி சைக்கிளைத் திருப்பி வயலை நோக்கிப் பயணித்தோம். வயல்காட்டு வீதிகளில் காவலுக்குச் செல்பவர்களின் காட்சியே தென்பட்டுக் கொண்டிருந்தன. இருவரும் கதைத்தபடியே வயலை அடைந்தோம்.

"தம்பி.. நான் என்ர கொட்டிலுக்கு வெளிக்கிடுறன்... நீ போய்த் தீவறையைக் கொட்டிலுக்க போட்டிற்று இரு... ஏதும் பிரச்சினை எண்டா... சத்தம்போட்டு லைற்றக்

கொட்டில்பக்கம் அடிச்சியெண்டா... வருவன்.. சரியே?...”

“ஓம் நாதண்ண...”

நாதண்ணையும் அவரின் வயல் குடிலைநோக்கிப் புறப்பட்டார். நான் சைக்கிளை உருட்டிக்கொண்டு வந்து குடிலுக்கு அருகில் இருந்த பாலைமரத்தில் சாத்தி விட்டு, குடிலுக்குச் சென்றேன். வயலில் தண்ணீர் வடிந்து பாதம் மூழ்கும் அளவிற்குப் பாய்ந்து கொண்டிருந்தது. எங்கட குடில், புத்துப் பிட்டியில் போட்டிருந்ததால் தண்ணீர் வெள்ளம் நன்றாகவே வடிந்திருந்தது. குடிலுக்குள் நுழைந்தவுடன் பறனைக் கிளீன் செய்துவிட்டுக் குடிலுக்குள் கிடந்த விறகுகளை எடுத்துத் தீவறை மூட்டினேன். வெள்ளத்தில் நனைந்து ஈரம் ஊறிப்போய்க் கிடந்த விறகுகள் என்றபடியால், நெருப்பு மூட்டக் கஸ்டமாய் இருந்தது. ஒருமாதிரி வயல் வெட்டை அருகுகளில் நின்ற பாலை மரங்களிலிருந்து விழுந்து கிடந்த விறகுகளைக் கொண்டு வந்து தீவறையை மூட்டினேன். விறகுகள் ஈரம் என்றாலும் சிறிது நேரத்தில் முயற்சி பலனளித்தது. கொட்டில் கூரையில் செருகிக்கிடந்த சொப்பின் பைகளையும், சாப்பாட்டுப்பார்சல் கடதாசிகளையும் பயன்படுத்தித் தீவறையை மூட்டிக் கொண்டேன். இருளும் சூழத் தொடங்கியது.


வயல் பகுதிகள் வழமைக்கு மாறாக அமைதியாகவே இருந்தன. யானைகளின் பிளிறல்களும், நரிகளின் ஊளைகளும் கேட்கவில்லை. கண்ணுக்கெட்டிய தூரங்களில் காவற் குடில்களில் எரியும் தீவறை வெளிச்சங்களே தென்பட்டுக் கொண்டிருந்தன. அவற்றைப் பார்க்கும்போது வயற்காவலுக்கு எல்லோரும் வந்திருப்பதை உணர்ந்தேன். இன்று மழை பெய்யவில்லை. இடி இடிக்கவில்லை. கூதற் காற்று வீசி என்னை நடுங்கவைக்கவில்லை. அமைதியாகவே பொழுது கழிந்து கொண்டிருந்தது. இன்று எனக்கு வேளைக்குப் பசிக்கத் தொடங்கியது. பறனில் ஏறி இருந்தபடி சாப்பாட்டுப் பார்சலைப் பிரித்துச் சாப்பிட்டு விட்டுக் கைகளைக் கழுவிக்கொண்டேன். நேரம் இப்போது ஏழைத் தாண்டிக்கொண்டிருந்தது.

குடில் தாவாரத்துக்குக் கீழால் தெரியும் வானத்தில், நட்சத்திரங்கள் ஒன்றிரண்டு மின்னிக்கொண்டிருந்தன. அப்படியே குடில் கப்பில் கொழுவிக் கிடந்த ரேடியோவை எடுத்துப் பாட்டைப் போட்டுவிட்டு மறுபடியும் அப்படியே கப்பில் கொழுவிவிட்டேன். சூரியன் எப். எம்மில் அருமையான பாடல்கள் ஒலித்துக்கொண்டிருந்தன. பாடல்களைக் கேட்டுவிட்டுக் கற்பனைகளில் மனம் பறந்துகொண்டிருந்தது. ஏதோ நினைவு வந்து பறனிலிருந்தபடியே லைற்றை எடுத்து வயல்பகுதிகளுக்கு அடித்துப் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொண்டேன். நேரமும் சென்றுகொண்டிருந்தது.

பாடல்களில் மனதைப் பறிகொடுத்துவிட்டுப் பறனில் மல்லாக்காய்க் கிடந்தேன். வேளைக்குச் சாப்பிடதோ?

என்னவோ? என்னை அறியாமலேயே கண்கள் மூடிக் கொண்டன. நல்ல நித்திரை. திடீரெனப் பெரிய சத்தம். காட்டு யானைகள் வயலுக்குள் இறங்கி விட்டன. லைற்றை அடித்துப் பக்கத்துக் கொட்டில்களில் கிடந்தவர்களைக் கூப்பிட்டுச் சத்தம் போட்டேன். யாரும் வரவில்லை. என் சத்தமும் அவர்களுக்கு விழுந்ததாய்த் தெரியவில்லை. ஓடவும் முடியாது. யானைகள் குடிலைச் சூழ்ந்த வரவைகளில் இறங்கிக் குட்டிகளோடு நாசப்படுத்திக்கொண்டிருந்தன. தீவறை விறகுகளை எடுத்துப் பொறி பறக்க எறிந்தேன். குடிலுக்குள் கிடந்த வெடிகளைக் கொழுத்தி எறிந்தேன். மண்ணெண்ணையைத் தோய்த்துத் தீப்பந்தத்தைக் கொழுத்திச் சூழற்றினேன். யானைகள் செல்வதாய் தெரியவில்லை. எல்லாம் வயல்களை நாசப்படுத்திக்கொண்டிருந்தன.

குடிலை, யானைகள் நெருங்காதபடி தீவறைகளைப் பெரிதாக மூட்டி, லைற்றை அடித்துப் பக்கத்துக் குடில்காரர்களைக் கூப்பிட்டுக் கத்தத்தொடங்கினேன். வயலுக்குள் இறங்கி ஓடவும் முடியவில்லை. குட்டிகளோடு யானைகள் நிற்பதால்



அடித்துக் கால்களால் உழக்கியே கொன்றுவிடும்.

மனதுக்குள் பெரும் பயத்துடன் அழுதபடி நெருப்புக் கொள்ளிகளைக் கைகளில் வைத்துச் சுற்றிக்கொண்டு வாய்விட்டுக் குழறிக்கொண்டிருந்தேன். யானைகளும் நெருங்கிக் குடிலை நோக்கி வந்துகொண்டிருந்தன. பின்னால் நெருங்கிய யானை ஒன்று குடிலை இழுத்து விழுத்துவதை உணர்ந்தேன்.

“என்ரை அம்மா....”

என்றபடி பெரியதாகக் குழறிக்கொண்டு பறனிலிருந்து குதித்துத் தீவறை விறகினை எடுத்துத் தணல் பறக்கச் செய்தபடி வயலுக்குள் இறங்கி ஓடியபோது, கால் தடக்கி நிலத்தில் சரிந்தேன். அதன்பின் என்னால் எழுந்து ஓட முடியவில்லை.

“என்ரை ஐயோ... அம்மா...”

என்றபடி கண்களைத் திறந்தேன். பறனுக்குக் கீழே என் உடல் கிடந்தது. பொழுதும் விடிந்து கிடந்தது. யானைகளின் ஊசலாட்டமின்றி வயலும் அமைதியாய் இருந்தது. அப்போதுதான் நான் கண்டது கனவு என்பது புரிந்தது அதை உறுதிப்படுத்தும் விதமாய் கண்ணீரைத் துடைத்தபடி கைகள் இருக்க, கண்கள் வயலைச் சுற்றிப்பார்த்துக் கொண்டிருந்தன...

******



சு.கிருந்திகா
உளவியல் துறை
யாழ் பல்கலைக்கழகம்

# தமிழ் சமுதாயத்தில் உள ஆற்றுப்படுத்தலை மேற்கொள்வதில் ஏற்படுகின்ற சவால்கள்

## 1.1) உள ஆற்றுப்படுத்தல் அறிமுகம்

மனித இனம் ஆரம்பமான நாளிலிருந்தே உள ஆற்றுப்படுத்தலும் வளர்ந்து வந்துள்ளது. உள ஆற்றுப்படுத்தலானது உளவளத்துணை, உளநல உதவி, ஆற்றுப்படுத்தல், சீர்மியப்படுத்தல், ஆற்றுப்பணி என பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகிறது. உள ஆற்றுப்படுத்தல் என்பது துணைநாடி தனது அக மற்றும் புற வளங்களை ஒன்றிணைத்து நெறிப்படுத்தித் தன் தேவையை பூர்த்தி செய்தலையும் பிரச்சினையைத் தீர்த்தலையும் குறிக்கின்றது. வண.பிதா எஸ்.டேமியன் அடிகளார் உள ஆற்றுப்படுத்தலை பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்தியுள்ளார்.

"பிரச்சினைகளோடு வருபவரை ஏற்று மதித்து கசப்பான அனுபவங்களை முழுமையாகப் பகிர உதவி அவரது உணர்வுகளுக்குள் புகுந்து அவரது ஏக்கங்களையும் தேவைகளையும் ஆசைகளையும் அறிந்து அவரது பிரச்சினையின் உண்மைநிலையை அவராகவே அறியச் செய்து அப்பிரச்சினைக்கு தீர்வுகாண வழிப்படுத்தி அவரது ஆற்றலை அவரோடு இணைந்து சோதித்து பிறரோடு நல்லுறவுகளைக் கட்டியெழுப்பி அவரது ஆற்றலை உணர்ந்து முழுமையான வாழ்வு வாழச் செய்யும் கலையே உளவளத்துணை ஆகும்."

.

## 1.2) தமிழ் சமுதாயம் ஓர் பார்வை

மக்களது உளநலம், உளசமூகப் பிரச்சினைகள் என்று நோக்கும் போது மக்களோடு சேர்த்து சமுதாயமும் உட்படுத்தப்படுகின்றது. சமுதாயம் மக்களால் உருவாக்கப்பட்டது. அதேசமயம் மக்கள் தம் சமுதாயத்தின் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டவர்கள்.

தமிழ் சமுதாயத்தைப் பொருத்த மட்டில் மக்கள் குடும்பங்களாக வாழ்கின்றனர். தனிமனிதர், குடும்பங்கள், சமுதாயம் என்பன ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவையாக காணப்படுகின்றன. இதன்படி தமிழ் சமுதாயத்தில் உள ஆற்றுப்படுத்தலின் சவால்கள் குறித்து ஆராய்வதற்கு முன் தமிழ் சமுதாயத்தின் கட்டமைப்புக்களையும் நடத்தைகளையும் விளங்கிக் கொள்ளல் முக்கியமாகின்றது.

இலங்கை தமிழ் சமூகம் அதன் வளமான வரலாறு, கலாசாரம் மற்றும் மத நம்பிக்கைகளால் தாக்கம் செலுத்தும் தனித்துவமான கட்டமைப்பு மற்றும் நடத்தை ஆகியவற்றைக் கொண்டுள்ளது. அவற்றுள் சில முக்கிய அம்சங்கள் (சமூக படிநிலை, குடும்பம் மற்றும் உறவுமுறை, பெண்களின் பங்கு, மொழியும் அடையாளமும், மத வேறுபாடு, கல்வி மற்றும் நிபுணத்துவம் , கலாசார மரபுகள்) காணப்படுகின்றன. இந்த குணாதிசயங்கள் இலங்கைத் தமிழ் சமூகத்தைப் பற்றிய பொதுவான புரிதலை வழங்கும் அதே வேளையில், சமூகத்திற்குள் மாறுபாடுகள் மற்றும் தனிப்பட்ட வேறுபாடுகள் இருக்கலாம்



என்பது குறிப்பிடத்தக்கது. கூடுதலாக, இலங்கைத் தமிழ் சமூகம், குறிப்பாக உள்நாட்டுப் போர் காலங்களில், இன மோதல்கள் மற்றும் இடப்பெயர்வுகளின் சிக்கலான இயக்கவியலால் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த காரணிகள் சமூக கட்டமைப்புகள் மற்றும் நடத்தைகளை வடிவமைத்துள்ளன.

## 1.3) தமிழ் சமுதாயத்தில் உள ஆற்றுப்படுத்தலின் சவால்கள்

உள ஆற்றுப்படுத்தல் ஆரம்பித்த காலத்திலிருந்து இன்றுவரை தமிழ் சமுதாயத்தில் பல்வேறுபட்ட சவால்களை எதிர்கொண்டு வருகின்றது. அத்தகைய சவால்களை பின்வருமாறு வகைப்படுத்தி நோக்கலாம்.

1.3.1) சமுதாய நடைமுறைகள் சார் சவால்கள்
1.3.2) சமுதாய மக்களது தனிப்பட்ட மனப்பாங்கு சார் சவால்கள்
1.3.3) தமிழ் சமுதாய உள ஆற்றுப்படுத்துனர்கள் சார் சவால்கள்
1.3.4) ஏனைய சவால்கள்
இவற்றை தனித்தனியாக நோக்குவதன் மூலம் மேலதிக விளக்கத்தைப் பெறமுடியும்.

### 1.3.1) சமுதாய நடைமுறைகள் சார் சவால்கள்

முழு உலகிலும் பல்வேறுபட்ட சமுதாயக் குழுக்கள் காணப்படுகின்றன. அவற்றில் தனித்துவமானதும் காலத்தால்

முந்தியதுமான சமுதாயமாக தமிழ் சமுதாயம் விளங்குகிறது. தமிழ் சமுதாயத்திற்கென்றே தனித்துவமான பண்பாடுகள், பழக்கவழக்கங்கள் மற்றும் கலாசாரங்கள் முதலியன இவ் உள ஆற்றுப்படுத்தல் சேவைக்கு சில சந்தர்ப்பங்களில் பெரும் சவாலாக அமைகின்றன.

* கலாசார வேறுபாடுகள்

தமிழ் சமுதாயமானது இந்து, கிறிஸ்தவம் மற்றும் இஸ்லாமியம் முதலிய மத வேறுபாடுகளையும் சாதிப் பாகுபாடுகளையும் பிரதேசத்திற்கு பிரதேசம் வேறுபட்ட பழக்கவழக்கங்களையும் கொண்டுள்ளது. இந் நிலையில் ஆற்றுப்படுத்துனர்களுக்கும் துணைநாடிகளுக்கும் இடையிலான கலாசார வேறுபாடுகளானது அவர்களது பயனுள்ள பகிர்வுகளில் தவறான புரிதல்களை உருவாக்குகின்றன.

* மொழித்தடை

தமிழ் சமுதாயத்தில் பிரதேசத்திற்கு பிரதேசம் வேறுபட்ட வழக்குச் சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. அத்தோடு பாமர மக்களும் படித்த மக்களும் இரண்டறக் கலந்து வாழ்கின்றனர். இந் நிலையில் மக்களது புரிதலுக்கு அப்பாற்பட்ட ரீதியிலான வார்த்தைப் பயன்பாடுகள் சவாலாக உள்ளது. அத்தோடு ஒப்பீட்டளவில் பெரும்பான்மையான ஆற்றுப்படுத்தல் சேவைகள் சிங்களம் மற்றும் ஆங்கிலத்தில் வழங்கப்படுகின்றன. இது தமிழ் பேசும் மக்களுக்கு பெரும் சவாலாக உள்ளது.

* சமூக பொருளாதார காரணிகள்

குறைந்த வருமான நிலை, வறுமை மற்றும் போக்குவரத்து தொடர்பான வரையறுக்கப்பட்ட அணுகுமுறைகளும் தமிழ் மக்கள் ஆற்றுப்படுத்தல் சேவையை பெறுவதில் பெரும் சவாலாக அமைகிறது.

* இறுக்கமான கட்டுப்பாடு

தமிழ் சமுதாயத்தில் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தமது தனிப்பட்ட விடயங்களை பிறருக்கு வெளிப்படுத்தக் கூடாது என்ற கலாசார விழுமியம் சார்ந்த சிக்கல் தன்மை காணப்படுகின்றது. தமிழ் பண்பாட்டில், ஒருவர் தனது தனிப்பட்ட பிரச்சினைகளை வேறு ஒருவருக்குச் சொல்வது வழக்கமான ஒன்றல்ல. எனவே ஒருவரது பிரச்சினைக்கு செவிமடுப்பதும் அவரை அவரது பிரச்சினை பற்றிக் கூற ஊக்குவிப்பதும் கடினமாக காணப்படுகின்றது.

* மட்டுப்படுத்தப்பட்ட வளங்கள் மற்றும் நிதி

எமது நாட்டைப் பொறுத்த மட்டில் தமிழ் சமுதாயத்தில் ஆற்றுப்படுத்தல் சேவைகள் மிகவும் குறைந்தளவிலான வளங்களையே கொண்டுள்ளன.



சிறுபாண்மையினரே தகுதி வாய்ந்த ஆற்றுப்படுத்துனர்களாகக் காணப்படுகின்றனர். சில ஆற்றுப்படுத்தல் நிலையங்கள் மற்றும் மனநல சேவை நிலையங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட நிதியுதவியே கிடைக்கப் பெறுகின்றன.

### 1.3.2) சமுதாய மக்களது தனிப்பட்ட மனப்பாங்கு சார் சவால்கள்

* மூடத்தனமான நம்பிக்கைகள்

தமிழ் சமுதாயத்தில் வாழும் மக்கள் தம் சமயப் பின்னணியின் அடிப்படையில் கடவுள் நம்பிக்கைகளையும் தாண்டி கண்மூடித்தனமான மூடத்தனத்தையும் கொண்டு காணப்படுகின்றனர். இது உள ஆற்றுப்படுத்தல் சேவைக்கு ஒரு வித சவாலாகவே காணப்படுகின்றது. உதாரணமாக உள ரீதியான குழப்பம் ஏற்பட்ட நபரை உள ஆற்றுப்படுத்தல் சேவைக்கு அழைத்து செல்வதைத் தவிர்த்து கடவுள் எல்லாம் பார்த்துக் கொள்வார் என்ற நம்பிக்கையிலேயே குறித்த நபரின் பிரச்சினைக்கு தீர்வு காணாதிருப்பதைக் கூறலாம்.

* களங்கமான விடயமாக பார்த்தல்

பண்பாட்டு மற்றும் பாரம்பரிய நம்பிக்கைகள் காரணமாக தமிழ் சமூகத்தில் உள ஆற்றுப்படுத்தல் சேவை இன்றும் பல தடைகளை எதிர்கொள்கின்றது. உள ஆற்றுப்படுத்தல் சேவையை நாடுவது என்பது ஒருவரின் பலவீனம் மற்றும் தனிப்பட்ட தோல்வியை ஏற்றுக்கொள்வதைக் குறிப்பதாக பலர் நம்புகின்றனர். பழைமைவாத சமூகங்களில் இது அதிகளவில் காணப்படுகிறது.

* விழிப்புணர்வின்மை

தமிழ் சமுதாயத்தில் குறிப்பாக கிராமப் புறங்களில் உள்ள பலருக்கு உள ஆற்றுப்படுத்தல் சேவை குறித்தும் உளநலப் பிரச்சினைகளைக் கையாள்வதன் முக்கியத்துவம் குறித்தும் விழிப்புணர்வு அற்ற நிலை காணப்படுகிறது.

* தம் பிரச்சினையை தாமே தீர்க்க வேண்டும் என்ற மனநிலை

தமிழ் சமுதாயத்தில் வாழும் மக்களில் பலரிடம் காணப்படும் ஓர் பண்பாக தனக்கான பிரச்சினையை தானே தீர்த்துக் கொள்ள வேண்டும் வேறு யாரிடமும் அதைப் பகிர்வதோ உதவி கேட்பதோ முறையற்றது என்ற எண்ணப்பாடு காணப்படுகின்றது.

* உள ஆற்றுப்படுத்தல் சார் விருப்பின்மை

குறித்த உளப் பிரச்சினைக்கு தன்னிடமும் தன் உறவுகளிடமும் கிடைக்காத ஆறுதல் வேறு எங்கும் கிடைக்காது என்ற எண்ணமும் தன் பிரச்சினையை முகம் தெரியாத நபருக்கு எவ்வாறு வெளிப்படுத்துவது



என்ற சிந்தனை காரணமாகவும் உள ஆற்றுப்படுத்தல் குறித்து மக்களிடையே காணப்படும் விருப்பின்மையும் பெரும் சவாலாக உள்ளது.

### 1.3.3) தமிழ் சமுதாய உள ஆற்றுப்படுத்துனர்கள் சார் சவால்கள்

தமிழ் சமுதாயத்தைப் பொறுத்தவரையில் சமுதாயம் சார்ந்தும் மக்கள் சார்ந்தும் காணப்படும் தடைகளோடு உள ஆற்றுப்படுத்துனர்கள் சார்ந்து காணப்படும் சவால்களும் ஏராளம் உள்ளன. இவை இன்றும் உள ஆற்றுப்படுத்தல் சேவையில் காணப்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றன. அவை பின்வருமாறு

* தேர்ச்சி பெற்ற உள ஆற்றுப்படுத்துனர்கள் இன்மை

உள ஆற்றுப்படுத்தல் வழங்கும் போது உள ஆற்றுப்படுத்துனர்கள் பல்வேறான திறன்களையும் தகைமைகளையும், பண்புகளையும் கொண்டிருக்க வேண்டும். எமது நாட்டில் தமிழ் சமுதாயத்தைப் பொறுத்தவரையில் சுனாமி மற்றும் யுத்தகாலத்தின் பின்னர் பாதிக்கப்பட்ட மக்களது வாழ்வை மீளக் கட்டியெழுப்பும் நோக்கில் உடனடியான புனர்வாழ்வின் அவசியம் கருதி அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினால் எந்தவித கல்வித் தகைமைகளும் பாராது மிகக் குறுகிய காலத்தில் உள ஆற்றுப்படுத்தல் வழங்குவதற்காக பலர் பயிற்றுவிக்கப்பட்டதுடன் அவர்களால் உள ஆற்றுப்படுத்தலும் வழங்கப்பட்டது. இந்தப்படி உள ஆற்றுப்படுத்துனர்களது கல்வித் தகைமை மற்றும் தகுதி ஆகியனவும் ஓர் சவாலாக உள்ளது.

* உள ஆற்றுப்படுத்துனருக்குரிய ஒழுக்க நெறிகள் பேணப்படாமை

உள ஆற்றுப்படுத்துனர்களுக்கென்று சில ஒழுக்க விழுமியங்கள், விதிகள், சட்டதிட்டங்கள் காணப்படுகின்றன. உதாரணமாக இரகசியம் பேணலை குறிப்பிடலாம். முறையான காரணமின்றி இரகசியம் பேணலை ஆற்றுப்படுத்துனர் கடைப்பிடிக்காத பட்சத்தில் அது ஒரு சவாலாக மாறுகிறது.

* உள ஆற்றுப்படுத்தல் சேவையில் துஷ்பிரயோகம்

உள ஆற்றுப்படுத்தலின் போது துணைநாடியின் பிரச்சினைகளை பகிருதல், துணைநாடியிடம் அதிக பணத்தை அல்லது பொருளை எதிர்பார்த்தல் ஆகியன மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்துகின்றன. இன்றைக்கும் நம் தமிழ் சமுதாயத்தில் இத்தகைய நோக்கோடு செயற்படும் ஆற்றுப்படுத்துனர்கள் காணப்படுகின்றமை மன வருத்தத்தை ஏற்படுத்துகின்றன..

* உள ஆற்றுப்படுத்துனருக்கான அங்கீகாரம் கிடைக்காமை

மேலைத்தேய நாடுகளில் உள ஆற்றுப்படுத்தல் சேவை என்பது பாரியதும், அளப்பரியதும், அத்தியாவசியமான சேவையாகக் காணப்படுகின்றது. ஆனால் நம் சமுதாயத்தில் போதைப் பொருள்

ஒழிப்புத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கும் அனுமதிகளும் ஊக்குவிப்புக்களும் கூட உள ஆற்றுப்படுத்துனர்களுக்கு கிடைப்பதில்லை.

* வருமான நோக்கம் கொண்ட உள ஆற்றுப்படுத்துனர்கள்

ஒரு சில உள ஆற்றுப்படுத்துனர்கள் ஆற்றுப்படுத்தல் சேவையை வெறுமனே பணம் ஈட்டிக் கொள்ளும் நோக்குடனேயே மேற்கொள்கின்றனர். இந்த நிலையானது சேவை மனப்பாங்கோடு செயற்படும் ஆற்றுப்படுத்துனர்களையும் தேவைகளோடுள்ள மக்களையும் பெரிதும் பாதிக்கின்றது.

* நிபுணத்துவம் பெற்ற உள ஆற்றுப்படுத்துனர்களின் தலையீடு

சாதாரணமாக பயிற்றப்பட்ட ஆற்றுப்படுத்துனர்களை கல்வித் தகைமையால் உயர்வான ஆற்றுப் படுத்துனர்கள் தட்டிக்கழிப்பதும் பொருத்தமற்ற வேலைகளில் அவர்களை ஈடுபடுத்துவதும் சிறந்த உள ஆற்றுப்படுத்தல் சேவைக்கு சவாலாக உள்ளது.

* உள ஆற்றுப்படுத்துனரின் சுய கவனமற்ற செயற்பாடுகள்

தமிழ் சமுதாயத்தில் மிகக் குறைந்த அளவிலான ஆற்றுப்படுத்துனர்களே காணப்படும் இந்நிலையில் பல்வேறு வகையான பிரச்சினைகளோடு வரும் மக்களை வழிப்படுத்துவதற்கென தமது உடல், உள ஆரோக்கியம் போதுமான ஓய்வு, முறையான உணவு போன்றவற்றில் ஆற்றப்படுத்துனர்கள் அக்கறை செலுத்தாது செயற்படுகின்றனர். இந்நிலையில் மேற்கொள்ளப்படும் ஆற்றுப்படுத்தல் சேவை சிறந்ததாக அமையுமா? என்பது கேள்விக்குரிய விடயமாகும்.

### 1.3.4) ஏனைய சவால்கள்

தமிழ் சமுதாயத்தைப் பொறுத்தவரையில் தமிழ் மொழியிலும் தமிழ் கலாசாரத்திலும் வரையறுக்கப்பட்ட தொழில்முறைப் பயிற்சி பெற்ற ஆற்றுப்படுத்துனர்களே காணப்படுகின்றனர். கல்வி மட்டம் குறைந்த மக்களோடு ஒரு சில கல்வியறிவு படைத்தோரும் உள ஆற்றுப்படுத்தலை தேவையற்ற விடயமாக நினைக்கும் போக்கு காணப்படுகின்றது. உளவியல் பயிலும் மாணவர்கள் மத்தியில் உள ஆற்றுப்படுத்தல் அறிவை வளர்த்தெடுப்பதற்கான தமிழ் மொழியிலான புத்தகங்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. உள ஆற்றுப்படுத்தல் தொடர்பான கற்கை நெறிகள் பெரும்பாலும் கோட்பாடுகள் சார்ந்த வகையில் கற்பிக்கப்படுவதோடு அவை செயன்முறைக் கல்வியாக மேற்கொள்ளப்படுவது மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. ,தனால் சிறந்த ஆளுமைகள் நிரம்பப் பெற்ற தமிழ் உள ஆற்றுப்



படுத்துனர்களை உருவாக்குவதில் கடினத்தன்மை காணப்படுகின்றன. ,வை யாவும் தமிழ் சமுதாயத்தில் உள ஆற்றுப்படுத்தல் சேவையின் சவால்களாகவே காணப்படுகின்றன.

### 1.4) சவால்களைக் குறைப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்.

*தமிழ் சமுதாய மக்களிடத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
*உள ஆற்றுப்படுத்தல் சேவையை மேலும் விஸ்திரப்படுத்தல்.
*உள ஆற்றுப்படுத்தல் கற்கை நெறிகளை செயன்முறைக் கல்வியோடு இணைத்துக் கற்பித்தல்.
*உள ஆற்றுப்படுத்துனர்கள் ஒழுக்க விழுமியங்களைப் பின்பற்றல்.

மேலுள்ள நடவடிக்கைகள் மூலம் தமிழ் சமுதாயத்தில் உள ஆற்றுப்படுத்தல் சேவையை வளர்தெடுக்க முன்வருவோம்.

******

## நல்ல வாசனை நல்லது

நல்ல வாசனை மூளையின் செயல் திறனை அதிகரிக்கும் என ஆய்வொன்றில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் உள்ள இர்வின் கலிபோர்னியா பல்கலைகழகத்தில் நடைபெற்ற இந்த ஆய்வில் 20 பேர் பங்கேற்றனர். ஆராய்ச்சியாளர்கள் இவர்களை இரு குழுக்களாக பிரித்தனர். அவர்களில் ஒரு குழுவினரிடம் ரோஜா, ஆரஞ்சு, யூகலிப்டஸ், எலுமிச்சை, மிளகுக்கீரை, ரோஸ்மேரி மற்றும் லாவெண்டர் முதலிய வாசம் கொண்ட இயற்கையான எண்ணெயை தொடர்ந்து நுகர வைத்தனர். ஒரு கருவியை கொண்டு காற்றில் செலுத்தப்படும் இந்த வாசத்தை தினமும் இரவில் 2 மணி நேரம், வீட்டில் பல இடங்களிலிருந்தும் அவர்கள் முகரும்படி செய்யப்பட்டது. இதே போன்று தினமும் 2 மணி நேரம், மற்றொரு குழுவினரிடம் தரமான வாசமில்லாத ஒரு பொருள் முகர செய்யப்பட்டது. 6 மாதங்கள் இந்த நடவடிக்கை தொடர்ந்தது. 6 மாதங்கள் கடந்ததும், அவர்களிடம் மீண்டும் நரம்பியல்-உளவியல் திறன் பரிசோதிக்கப்பட்டது. இதில் நல்ல வாசனையை முகர்ந்தவர்களின் முடிவெடுக்கும் திறன் முன்பிருந்ததை விட அதிகரித்திருப்பதை ஆராய்ச்சியாளர்கள் கண்டனர். மேலும், அந்த குழுவில் உள்ளவர்களுக்கு நல்ல தூக்கம் கிடைத்ததாகவும் கண்டறிந்துள்ளனர். நம்மை சுற்றியுள்ள காற்று மண்டலத்தில் நல்ல வாசம் இருக்கும்படியாக வைத்து கொண்டால் நமது மூளையின் செயல்பாடு அதிகரிக்கும் என்றும் வயதானால் தோன்றும் ஞாபக சக்தி குறைபாடுகள் சம்பந்தமான நோய்கள் குறையும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் அறிவித்திருக்கின்றனர்.



ஆய்வு அரசர்கள் போட்டியில் முதலாம் இடம் பெற்ற ஆய்வு

7

# மாணவர் மத்தியில் கொரோனாவின் தாக்கம்



தெ. வஜிதா

### முடிவுரை

மாணவர்களிடையே கொவிட்-19 பற்றிய அறிவு, உளப்பாங்கு மற்றும் நடத்தை பற்றிய அணுகுமுறை மற்றும் பயிற்சி குறைவாகக் காணப்பட்டது. அத்துடன் பெற்றோரின் கல்வி நிலை, பாலினம், வருமானம், மற்றும் கிராமப்புறக் குடியிருப்பு ஆகியவை மாணவர்களிடையே செல்வாக்குச் செலுத்துகின்றது. அத்துடன் மாணவர்கள் மத்தியில் கொரோனா வைரஸ் ஒரு சமூகப் பரவலாகக் காணப்படுவதாலும் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதில் அச்ச நிலைக்கு உள்ளாகுகின்றார்கள். இவ்வாறான நிலையில் மாணவர்கள் மத்தியில் கொரோனா நோய்த் தொற்றுக் குறித்த சரியான புரிதலினை ஏற்படுத்துவது மட்டுமல்லாது விழிப்புணர்வு சார்பான நடவடிக்கைகளினையும் முன்வைக்க வேண்டும்.

பங்கேற்ற மாணவர்களில் பெரும்பாலானோர் நோயைத் தடுப்பது மற்றும் கட்டுப்படுத்துவது குறித்து நேர்மையான அணுகுமுறையை கொண்டிருந்தனர். அத்துடன் பெரும்பாண்மையானோர் முகமூடியை பயன்படுத்துவதாகவும் கை கழுவுதல், தடுப்பு நடவடிக்கைகளை, உத்திகளைப் பயன்படுத்துவதாகவும் தெரிவித்தனர். ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களில் 100% ஆனவர்கள் கொரோனா வைரஸ் நோய் தொற்றுக்கான காரணி வைரஸ் என்பது குறித்த தெளிவினை உடையவர்களாக காணப்படுவதுடன் இவர்களில் 80% ஆனவர்கள் கொரோனா வைரஸ ில் அடங்கியிக்கும் மரபணுப் பொருட்களின் வகை DNA எனவும் ஏனைய 20% ஆனவர்கள் அது குறித்து தெரியவில்லை எனவும் கூறியிருக்கின்றனர்.

ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களில் 89.1% ஆன மாணவர்கள் கொவிட் வைரஸ் தொற்றுக்கான தடுப்பு நடவடிக்கைகள் குறித்து அறிந்திருப்பதாக கூறியிருப்பதுடன்

அவர்களிடம் பெற்றுக்கொள்ளபட்ட கருத்துக்களின் படி முக கவசம் அணிதல் , சுய பரிசோதனை செய்து கொள்ளல், பொது இடங்களுக்கு முக கவசம் அணிந்து செல்லல், கை கழுவுதல், இருமல், தடுமல் இருந்தால் வீட்டை விட்டு வெளியேறாது இருத்தல், காச்சல் இருப்பின் வைத்தியசாலைக்கு செல்லுதல், இடைவெளிகளை கடைப்பிடித்தல், கையுறைகளை அணிதல், சட்டதிட்டங்களை பின்பற்றுதல், சுய தனிமைப் படுத்திக்கொள்ளல் என்பவன பொதுவான தடுப்பு நடவடிக்கைகளாக குறிப்பிடிருக்க காணலாம்.

இதன்படி மாணவர்கள் கொரோனா வைரஸ் குறித்த அறிவினை கொண்டிருந்தாலும் அவர்களினால் சுகாதார நடைமுறைகளை சரிவர பின்னபற்ற முடிவதில்லை. அத்துடன் உள ரீதியாக மாணவர்கள் கொண்டிருக்கும் எண்ணப்பாங்குகளும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றாமல் இருப்பதற்கு காரணமாக அமைகின்றது. இவ் நோய் குறித்து பெரும்பாலான மாணவர்கள் அக்கறை கொண்டிருந்தனர். குறிப்பாக ஆய்வு பிரதேச மாணவர்கள் முகமூடிகளை



அணியும் முறை குறித்து தெளிவான விளக்கத்தினைக் கொண்டிருக்கவில்லை. மேலும் அதற்கான வசதிப்பாடுகள் குறைவாக காணப்படுகின்றன. இவ்வாறான சூழ்நிலைகளில் மாணவர்களின் கல்வி நிலையானது பாதிப்படைவதோடு சுகாதாரம் சார் நடவடிக்கைகளினை முன்வைக்க வேண்டும். உடல் ரீதியான தூ ரத்தைக் கடைப்பிடித்தல் அல்லது உங்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையில் 1.5 மீற்றர் இடைவெளியைப் பேணுதல் போன்ற செயற்பாடுகளின் ஊடாக கொரோனா குறித்த அச்சத்தினை மாணவர்கள் மத்தியில் இழிவளவாக்கிக் கொள்ளலாம்.

## பரிந்துரைகள்

* சவர்க்காரம் மற்றும் குழாயிலிருந்து ஓடும் நீர் கொண்டு உங்கள் கைகளை அடிக்கடி கழுவுங்கள். குறைந்தது 2 வினாடிகளுக்கு காகிதத் துண்டு அல்லது கை உலர்த்தி கொண்டு உலரவையுங்கள்.

* உங்கள் கை, மூக்கு அல்லது வாயைத் தொடாதிருக்க முயற்சி செய்யுங்கள்.

* நீங்கள் இருமும் போது அல்லது தும்மும் போது ஒரு காகிதத் துண்டினால் உங்கள் மூக்கு மற்றும் வாயை மூடவும். உங்களிடம் காகிதத் துண்டு இல்லாவிட்டால், உங்களின் சட்டையின் மேற்புறக் கையினுள்ளோ அல்லது முழங்கையினுள்ளோ தும்மவும் அல்லது இருமவும்

* உங்களுக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்தால் வீட்டிலேயே தங்கியிருங்கள். நீங்கள் மருந்து எடுத்துக் கொள்பவரானால், போதுமானளவு இருக்கிறதா என்று உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

* ஆரோக்கியமான பழக்க வழக்கங்களைத் தொடரவும், ஒழுங்கான உடற்பயிற்சியை பெறுங்கள், தண்ணீர் குடியுங்கள், போதுமான அளவு தூங்குங்கள்.

* 60 சதவீதத்திற்கும் அதிகமான எரிசாராயம் உள்ளடக்கிய கைத்தொற்றுத் தடைப்பொருளை வாங்கவும். (Senitizer)

* அடிக்கடி தொடும் பொருட்களை தொற்று நீக்கவும்

* நோய்த் தொற்று உள்ளவர்களிடமிருந்து முற்றாக விலகி இருக்கவும்

* இளநீர் மற்றும் கஞ்சி போன்ற நீர்ச்சத்து மிகுந்த ஆகாரங்களை பருகுதல்


* தடுப்பூசிகள் வழங்கப்படும் போது அதனை உரிய முறையில் பெற்றுக் கொள்ளுதல்

(முற்றும்)

# இளம் சதுரங்க சக்கரவர்த்தி

பதினெட்டு வயதான இந்தியாவின் இளம் தமிழ் வீரர் பிரக்ஞானந்தா டை-பிரேக்கரில் உலகின் 3ஆம் நிலை வீரரான ஃபேபியானோ கருவானாவை வீழ்த்தி சதுரங்க உலகக்கோப்பை இறுதிச்சுற்றுக்கு முன்னேறினார். இறுதிப் போட்டியில் தரவரிசையில் முதல் இடத்தில் இருக்கும் மேக்னஸ் கார்ல்சனுக்கு எதிரான போட்டியில் பிரக்ஞானந்தா தோல்வியடைந்தார். இதன்மூலம் அவருக்கு இரண்டாம் இடம் கிடைத்திருக்கிறது.

உலகக் கோப்பை இறுதிப்போட்டியில் விளையாடும் மிக இளம் வயதினர் என்ற பெருமையை பெற்றார். செஸ் ஜாம்பவான் விஸ்வநாதன் ஆனந்துக்குப் பிறகு செஸ் உலகக்கோப்பையின் இறுதிப்போட்டிக்கு முன்னேறிய முதல் இந்தியரும் இவரே ஆவார்.



# சிறுவர்களுக்காக இலங்கை வந்த சச்சின்...!




தி. கோபி பிரகாஸ்

சுவற்றில் கரிக்கோடு போட்டு விளையாடிய தலைமுறை தொட்டு நிட்டெண்டோவில் வீடியோ கேம் விளையாடிய தலைமுறை வரை மூன்று தலைமுறைகள் கொண்டாடிய ஆதர்சன நாயகன். தேநீர் குடிக்கும் போது கூட "Boost is the secret of my energy" என உச்சரிக்க வைத்த பெயர். MRF துடுப்பு மட்டைக்கான கம்பனி அல்ல ஒரு டயர் கம்பனி என்று 90s கிட்ஸ் உணர்வதற்குள் எமது பால்யத்தை கடக்க செய்த வித்தை அறிந்த மாயாஜாலக்காரன். சதம் குவிப்பதே சாதனையாக கருதும் வேளையில் சதத்தில் சதம் கண்ட சாதனை நாயகன். லாரா தொட்டு கோலி வரை அன்றும் இன்றும் துடுப்பாட்ட வீரரை ஒப்பிடுவதற்கான நிரந்தர SI அலகு.

கிரிக்கெட்டின் அசுரர்கள் என்று வர்ணிக்கப்பட்ட 90s ஆஸி அணியை ”We did not lose to a team called India. we lost to a man called Sachin” என்று அணித்தலைவர் Mark Taylor போற்றும் வகையில் சார்ஜாவில் தனிமனிதனாக வதம் செய்து கிரிக்கெட்டின் கடவுளாக அவதரித்து இந்தியாவின் கடைக்கோடி கிராமத்திலிருக்கும் சிறுவனையும் பேட்டை கையிலெடுக்க செய்து இன்று இந்தளவிற்கு இந்தியாவில் கிரிக்கெட்டை மதம் போல மாற்றியதன் காரணகர்த்தா.

கிரிக்கெட்டின் விதிமுறைகள் அறிய முன்னமே கிரிக்கெட்டின் அறிமுகமாய் அமைந்த ப்ராண்ட் யுனிசெப் அமைப்பின் தெற்காசிய பிராந்தியத்தின் ப்ராண்ட் அம்பாஸிடராக இலங்கைக்கு விஜயம் செய்தமை பாராட்டதக்க செயலாகும். கொவிட் தொற்று மற்றும் 2022 பொருளாதார நெருக்கடியால்

பாதிக்கப்பட்ட சிறுவர்களை நேரில் சென்று சந்தித்துடன் சப்ரகமுவ மாகாணத்தில் யுனிசெப் அமைப்பின் திட்டம் முன்னெடுக்கப்படும் முன்பள்ளிகளுக்கும் சில பாடசாலைகளுக்கும் கள விஜயம் மேற்கொண்ட பின்னர் 08.08.2023 அன்று கொழும்பில் ஊடகவி யலாளர்களுக்கு முன்னிலையில் தன் நல்லெண்ண விஜயம் குறித்த உரையை நிகழ்த்தினார்.

யுனிசெப்பின் தெற்காசிய பிராந்தியத்திற்கான நல்லெண்ண தூ துவராக 2013 இல் நியமிக்கப்பட்ட சச்சின் யுனிசெப்பின் கைகழுவுதல் மற்றும் சுகாதாரம் தொடர்பான திட்டத்திற்காக 2015ல் இலங்கைக்கான தனது கடந்த வருகையின்போது ஓரணியாக முரளியுடன் கைகோர்த்து குறித்த நோக்கத்தை அடைவதற்கான செயற்திட்டங்களை இருவரும் முன்னெடுத்ததை நினைவுகூர்ந்தார்.

றுவன்வெல்லவில் விஜயம் செய்த வேளை அங்குள்ள தோட்ட தொழிலாளர்கள் நேரில் சந்தித்து அவர்கள் அன்றாடம் எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் அவர்களுக்கான தேவைகள் இன்னமும் பாரியளவில் இருப்பதை பகிர்ந்ததுடன் சிறுவர்களே எமது எதிர்காலம் என்ற வகையில் அவர்கள் மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியமாகவும் வளர வேண்டியதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

ஆரம்பத்தருணங்கள் ,போசாக்கான உணவுகள் மற்றும் கல்வி ஆகிய மூன்றும் சிறுவர்களின் வளர்ச்சிக்கு இன்றியமையாதவை என்பதைக் குறிப்பிட்டு 80%மான மூளை வளர்ச்சிப் படிநிலைகள் குழந்தை கருவாகிய முதல் 1000 நாட்களில் நடைபெறுவதால் குழந்தை பிறந்த பின்னரான முதல் இரு வருடங்களும் மிக முக்கியமானது. இவ்வேளைகளில் ஊட்டசத்து தொடர்பில் அவதானமாக இருக்கும் வேளை பெற்றோர் குழந்தைகளுடன் செலவிடும் நேரமும் பொன்னானது எனத் தெரிவித்திருந்தார். அவர்களைக் கட்டிபிடித்து ஆரத்தழுவி அவர்களுடன் விளையாடினார். ஒவ்வொரு மணித்துளியும் எதிர்காலத்தில் அவர்களுக்கான வலுவான அடித்தளத்திற்கான உந்துசக்தியென்றும் நேரம் பொன்னானது அதேவேளை








மனிதர்களும் முக்கியாமனவர்கள் என்பதையும் வலியுறுத்தினர்.

இதேவேளை ஊட்டச்சத்துக்களின் அவசியம் பற்றிய அறியாமையால் பள்ளிப்பருவத்தில் மதிய உணவுகளைத் தவிர்த்து வெறும் குளிர்பானம் மட்டுமே அருந்தி விளையாடிய தருணங்களை நினைவு கூர்ந்து பின்னர் ஊட்டச்சத்தின் முக்கியம் பற்றிய படிப்பினையின் பின்னர் திருந்தி உணவருந்தியே விளையாடச் சென்றதை குறித்தும் இன்றைய பொருளாதார நெருக்கடியினால் பல குடும்பங்கள் போதுமான மற்றும் சத்தான உணவுகளை பெற்றுக் கொள்வதில் உள்ள இடர்பாடுகளையும் பகிர்ந்திருந்தார்.

ருவன்வெல்லவில் பாடசாலைக்கு விஜயம் செய்த போது தனது மனதை நெகிழ்வித்தச் செயலாக அங்குள்ள 5,6 வயதுடைய சிறுவர்கள் உணவு வேளையில் தங்கள் உணவின்




ஒரு பகுதியை பறவைகளுக்காக தனித்தட்டில் எடுத்து வைத்த செயலை "It's a beautiful thought because it's about about caring sharing and giving " என வியந்து மெச்சினார்.

கல்வியானது சிறுவர்களது உரிமை மட்டுமன்றி அதுவே அவர்களது வாழ்க்கைக்கான அஸ்திவாரம். பெருந்தொற்றுக் காலப்பகுதியில் பாடசாலைகள், வேலைத் தளங்கள் மூடப்பட்டமையால் கல்வியின்றி மாணவர்களும் ஊழியமின்றி பல குடும்பங்களும் தவித்தனர். தொழிநுட்பத்தின் வளர்ச்சியால் தீர்வுகளைக் கண்டு இவ்விடர்பாடுகளை முறியடித்து இணையத்தால் இணைந்தோம். எனவே இவ்வாறான சவால்களை எதிர்காலத்திலும் வெற்றிகரமாக சந்திக்க இலங்கையின் இளைஞர்கள் புத்தாக்க சிந்தனையுடன் ஆக்கபூர்வமான விடயங்களில் ஈடுபட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார். மேலும் கல்வியானது வெறும் வகுப்பறையுடன் மட்டுப்படுத்தப் பட்டதன்று. கிரிக்கெட் எவ்வாறு தனது வாழ்க்கையில் பல பாடங்களை கற்பித்ததோ அதைப் போன்று மாணவர்களும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் பங்குபெறுவதன் முக்கியத்துவத்தையும் பகிர்ந்து முதல் இன்னிங்ஸை யுனிசெப் தொடங்கி விட்டது. இரண்டாம் இன்னிங்ஸ் உங்கள் கையில் என்று தன் உரையை நிறைவுச்செய்தார்.



# சித்திராங்கதா

காவ்யமோகன்

## காவல் செய்யுங்கள்!

ஒரு செய்தி உண்மையாக இருக்கலாம். பொய்யாகவும் இருக்கலாம். ஆனால் மனித மனம் அச்செய்தி உண்மையாக இருக்க வேண்டும் என்றோ அல்லது பொய்யாக இருக்கவேண்டும் என்றோ தனக்கு இணக்கமான ஏதோ ஒரு பக்கம் சாய்ந்து நின்று சமாதானம் செய்யும். ஆனால் யார் என்ன சொன்னாலும் உண்மை என்பது தான் நம்புவது மட்டுமே என்று எண்ணவைக்கும் சக்தி காதலிற்கே உண்டு. சித்திராங்கதாவை பொறுத்தவரை வருணகுலத்தான் இறக்கவில்லை என்கிற செய்தியே உண்மை. அதில் அவளிற்கு துளியளவும் ஐயம் இல்லை. ஆதலால் மற்ற எந்த செய்தியையும் குறித்து அவள் கலங்கவில்லை. வருணகுலத்தான் உயிருடன் உள்ளான் என்கிற செய்தி கேட்டு அவள் எந்தப்பூரிப்பும் அடையாமைக்கும் அதுவே காரணம். வருணகுலத்தான் வழங்கியனுப்பிய ஓலையோடு வந்த பெட்டி சித்திராங்கதாவின் அருகில் வைக்கப்பட்டிருந்தது. பெட்டியை மீண்டும் மீண்டும் பார்த்தாள் சித்திராங்கதா. எங்கோ அவள் நினைவில் அந்தப்பெட்டி பதிந்திருந்தது. ஆனால் முழுதாய் ஞாபகத்தில் இல்லை.

நடுக்கூடத்தில் குற்றவாளியாய் கிடந்த சித்திராங்கதாவின் சிந்தையில் என்ன ஓடுகிறது என்பதை அங்கிருந்த எவராலும் ஊகிக்க முடியவில்லை. மஞ்சரி தேவியினதும் மாருதவல்லியினதும் கண்கள் செய்வன ஏதுமறியாமல் பரிதாபம் வழிய சித்திராங்கதாவை பார்த்துக் கொண்டிருந்தன. வருணகுலத்தானிடமிருந்த வந்த ஓலையை வாசிக்க ஆரம்பித்தான் சேவகன்.

“நல்லை நெடுவேந்தரிற்கு வணக்கங்கள்.. போரின் வியூகங்களை கணத்திற்கு கணம் புதுப்பிக்க வேண்டியுள்ளன. களத்தில் என்ன நடந்தது என்பதை மகிழாந்தகன் தற்சமயம் உங்களுற்கு தெரியப் படுத்தியிருப்பான். உடனுக்குடன் தகவல் தர முடியாமல் போனதை நல்லை வேந்தர் பொறுத்தருள வேண்டுகிறேன். தீர்க்கமான சில

முடிவுகளை திடுமென நான் எடுக்க நேர்கிறது. ஆனால் வெற்றிக்கனிக்கான வேட்கையில் நான் பின்வாங்கப் போவதில்லை என்பதை இப்போதும் உறுதியளிக்கிறேன். வெற்றி என்பது எமக்கே சொந்தமானது. அதற்காக எந்த எல்லைக்கும் செல்ல தயார் நிலையில் உள்ளேன். தயக்கமின்றி என் மீதான நம்பிக்கையை வேந்தர் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். வெற்றிச் செய்தியோடு நல்லைமண்ணிற்கு விரைந்து வர காத்திருக்கிறேன்.

இந்த போராட்டத்திற்காக நல்லை மக்களும், அரசும் தஞ்சைவீரன் வருணகுலத்தான் எனக்களித்த மதிப்பிற்கும் உபசாரத்திற்கும் என அத்தனைக்கும் என் ஆயுள் கடைநாள் வரை கடன் பட்டு நிற்கிறேன்.. இச்சமயமும் தங்களிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தே இவ்வோலையை வேந்தரிற்கு எழுதுகிறேன்.

இந்த விடயத்தை தங்களிடம் கூறுவதில் தயக்கம் என்னுள் இருந்தாலும் அதன் அவசியம் இப்போது அதிகம் என்று கருதுகிறேன்.

இப்போது இந்த ஓலையை நீங்கள் வாசித்துக் கொண்டிருக்கும் கணத்தில் உங்களோடு பேசிக்கொண்டிருப்பது இந்த வருணகுலத்தானின் இதயம் என்பதை அறிந்திடுக அரசே. போராடுவதற்காக தான் ஈழம் நோக்கி வந்தேன். இந்த போராட்ட களம் தான் என் நோக்கமாக இருந்தது.

அன்று இந்து மகாசமுத்திரத்தில் வங்காள விரிகுடாவை கிழித்துக் கொண்டு என் படைக்கப்பல்கள் ஈழம் நோக்கி வந்தபோது ஈழத்தின் கரைகண்ட கணத்தில் நான் கண்டு வியந்த பேரழகுக் காட்சி - முத்து குளித்து மலைபோல் குவித்து வைக்கப்பட்டிருந்த சிப்பிகள் தான். இந்த சிப்பிக் குவியல்களில் இருந்த முத்துக்களின் பேரழகை என் கற்பனைக்கண்களால் அன்று எண்ணிப்பார்த்து வியந்தேன். இத்தனை முத்துக்கள் நிறைந்த பொக்கிச தீவிற்குள் நான் நுழையப்போகிறேன் என்ற எண்ணத்தில் களித்தேன். ஆனால் இந்த பெருஞ்சமுத்திரத்தின் முத்தாகவே மின்னும் தீவிற்குள் தான் வந்துவிட்டேன் என்று அன்று முழுதாய் உணரவில்லை.

வந்த நாள் முதல் கொண்டு எனக்கும் படை வீரர்களிற்கும் தேவைக்கதிகமாக எல்லாவற்றையும் உவந்தளித்தீர்கள். வாள் வழங்கும் விழாவில் வாளொடு நீங்கள் வழங்கிய அஸ்வதமங்கல புரவியை போன்றொரு பரிசு வீரனிற்கு வேறிருக்கமுடியுமா? இன்று வரை என்னுடன் என் வழிகாட்டியாய் அதுவே பிரியாதிருக்கின்றது. அனைத்தையும் பார்க்க பார்க்க ஈழத்தின் ஆச்சரியங்களிற்குள் நானே தொலைந்து போனேன்.

நான் சற்றும் எதிர்பாராத சமயம் என் வாழ்வின் அர்த்தத்தையே காட்டுவது போல் ஒரு நாட்டிய நிகழ்வை நீங்கள் தான் நடத்தி வைத்தீர்கள். இந்த முத்து தீவின் மொத்த அழகும்

ஒன்றாய் சேர்ந்து வந்து அபிநயம் கூட்டியது போல் ஓர் உருவம் . பெருவணிகர் மகள் சித்திரங்கதாவை பற்றித்தான் கூறுகிறேன் என்பதை தாங்கள் அறிந்திருப்பீர்கள். ராணி கல்யாணிதேவியை பற்றி நீங்கள் சொன்னபோது உங்கள் கண்களில் கண்ட அதே பிரகாசத்தை இப்போது என்கண்களிலும் நீங்கள் காண்லாம். சித்திராங்கதாவை நேசிக்கிறேன் என்பது சதாரண வார்த்தைதான். என் நேசத்தை விளக்க ஓர் வார்த்தையை எந்த சமுத்திரத்தில் குளித்தாலும் என்னால் கண்டடைய முடியாது. அவளிற்காகவே பிறந்ததாய் நினைத்தேன். அவளிற்காகவே படைபலம் பெற்றேன். அவளிற்காகவே ஈழம் வந்தேன் என்றும் நம்பத் தொடங்கினேன்.

அவளை சந்திக்கும் நாளிற்காய் நான் தவம் இருந்தேன். அப்படியொரு பொழுதில் அவளுடனான சந்திப்பின் சிறு வாய்ப்பில் தான் அவள் இந்த மண்ணின் மீது கொண்ட காதலையும் புரிந்து கொண்டேன். அவள் என் மீது கொண்ட காதலின் ஆழமே இந்த மண் மீது கொண்ட அன்பின் அக்கறையில் தான் உருவாகிறது என்பதை அறிந்து கொண்டேன்.

அதையே எதிரிகளும் பயன்படுத்திக் கொள்ள நினைக்கிறார்கள் என்று எனக்கன்று சந்தேகம் வந்தது. என் காதல் தேவதையை எதிரிகளிடம் இருந்து எப்படியாவது காப்பாற்ற வேண்டும் அவளிற்காக - அவளைக் காப்பதற்காகவே அவளுடன் வன்னிக் கோட்டைக்கு சென்றிருந்தேன். அங்கு ராணி இராஜகாமினி, வன்னியத்தேவனை சந்தித்தது- அதனூடாக நான் கொண்ட ஐயங்கள் - தாங்கள் அவற்றை எனக்கு தெளிவுபடுத்தியது பற்றி எல்லாம் தாங்களே அறிவீர்கள். இந்த எந்த தெளிவும் சித்திராங்கதாவிற்கு கிடைக்கவில்லை. அவளது பதில் கிடைக்காத ஐயங்கள் தங்கள் மீதான பகையாக மாறி இருப்பதை அறிகிறேன். அவள் இப்போது என்ன செய்து கொண்டிருக்கின்றாள் என்ன மனநிலையில் இருக்கிறாள் என்பது கூட எனக்குத் தெரியாது. களம்புக முன்னர் கூட அவளை சந்திப்பதற்கு எத்தனையோ முயற்சிகளெடுத்தேன். வேண்டுமென்றே தான் என் சந்திப்பை அவள் நிராகரித்திருக்கிறாள்.


எதார்த்தமாக நான் அவளை சந்தித்தது எத்தனையோ முறை. அவளை நான் சந்திக்க நினைத்தால் அல்லது அவள் என்னை சந்திக்க நினைத்தால் எம் சந்திப்பை இயற்கை



நடத்தி வைக்கும். ஆனால் களம்புக முதல் நான் அவளை சந்திக்க எத்தனையோ முயற்சியெடுத்தும் அது நடக்கவில்லை என்றால் அது அவளது கோபத்தின் பலன்தான். அவள் இக்கணம் என்ன நினைக்கிறாள் என்று தெரியவில்லை. அவளிற்காக நான் என்ன செய்தேன் என்ற கேள்விக்கும் என்னிடம் பதில் இல்லை. ஆனால் ஒன்று அவள் எதை எதிர்பார்த்தாளோ- இந்த தேசம் எப்படி இருக்கவேண்டும் என்று நினைத்தாளோ அதற்காகவே நான் போராடுகிறேன் என்பதை அவளிற்கு நிச்சயம் புரியவைப்பேன். போரில் வெற்றிவாகை கொண்டு அவள் வேண்டிய தேசத்தை அவளிற்காக நான் கொண்டுவரும் போது அவள் நிச்சயம் என்னை புரிந்து கொள்வாள் என்ற நம்பிக்கையிலே நான் முன்னேறுகிறேன்.

அதுவரை அவளை எந்த ஆபத்தும் சூழ்ந்து கொள்ளாமல் எப்படி காப்பது என்று அறியாமல் குழம்புகிறேன் இச்சமயம். ஆனால் நல்லை வேந்தர் அதை அறிவார் என்று நம்புகிறேன். என் மனதின் ஒரே ஒரு வேண்டுகோள் இதுதான் அரசே. நான் உங்களிடம் இதை கேட்பது முறையாகுமா என்று எனக்கு தெரியவில்லை. கல்யாணிதேவியை காக்க தவறியதாய் நீங்கள் நித்தமும் கொள்கிற வேதனையை நான் நன்கறிவேன். அந்த தைரியத்திலே கேட்கிறேன். என் வேதனையை தங்களை மிஞ்சி அறிய யாருமில்லை. எனக்காக என்னவளை காவல் செய்யுங்கள். இதோ இந்த ஓலையோடு அனுப்பி வைத்துள்ள பெட்டிக்குள் இருப்பது சித்திராங்கதாவின் தகப்பனார் எச்சதத்தனார் எனக்களித்த முத்துக்களாலான மணிமாலையாகும். இந்த மணிமாலையை அவையில் என் கரங்களினால் அவளிற்கு அணிவித்து அவளை மணஞ்செய்ய வல்ல விதியை வேண்டி நிற்கிறேன். அதுவரை அவளை காக்க வேண்டி உங்களிடம் தயவு கூருகிறான் இந்த தஞ்சைவீரன் வருணகுலத்தான். அத்தனைக்கும் நன்றி அரசே! ”


ஓலை வாசித்து முடிந்தது. அவையில் அமைதியை தவிர எந்தக்குரலும் இல்லை. குளமாகி நின்ற சங்கிலியன் கண்கள் மெல்ல நிமிர்ந்தன.



“இப்போதாவது சொல்லுங்கள் தந்தையே! நீங்கள் செய்வது சரியா?”

அவையின் மௌனத்தை குலைத்து ஒலித்தது அந்தக்குரல்.

தொடரும்....









# என்னென்ன மாற்றங்கள்...?

எஸ்.எஸ்.நுஜன்

கடந்த முறை இந்தியாவில் நடந்த உலகக் கோப்பைக்குப் பின்னர், எவை மாறிவிட்டன என்பதை ஆராய்வதே இந்த கட்டுரையின் நோக்கம்.

### (1) அகமதாபாத்

தொடக்கப் போட்டி, இறுதிப் போட்டி, இந்தியா எதிர் பாகிஸ்தான், தொடக்க விழா, நிறைவு விழா.ஈடன் கார்டன் மற்றும் வான்கடே ஆகியவற்றிலிருந்து இந்திய கிரிக்கெட்டின் புதிய தலைநகரம் மற்றும் அதிகார மையமான 100,000 முதல் 132,000 வரை இருக்கும் திறன் கொண்ட பளபளப்பான புதிய நரேந்திர மோடி ஸ்டேடியத்திற்கு மாறியுள்ளது .

இது புதிதாக திறக்கப்பட்ட மூன்று ஆண்டுகளுக்குள், ஒரு உலகக் கிண்ண இறுதிப் போட்டி, இரண்டு ஐபிஎல் இறுதிப் போட்டிகள் மற்றும் ஒரு ஐபிஎல் தொடக்கப் போட்டி, மூன்று டெஸ்ட் (ஆஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்துக்கு எதிராக), சையது முஷ்டாக் அலி டிராபி இறுதி ஆகியவற்றை நடத்தியிருக்கும்.

### (2) பந்து வீசக் கூடிய மட்டையாளர்கள்

2011 சாம்பியனான இந்திய அணியில் யுவராஜ் சிங், வீரேந்திர சேவாக், சுரேஷ் ரெய்னா மற்றும் சச்சின் டெண்டுல்கர் இருந்தனர். ஒவ்வொரு அணியிலும் குறைந்தது இரண்டு பேர் இருந்தனர். பென் ஸ்டோக்ஸ் அல்லது ரவீந்திர ஜடேஜா போன்ற அல்லாது, ஆனால் பந்துவீசக்கூடிய மட்டையாளர்கள், ஆடுகளத்தில் சாதகமான தன்மை இருந்தால் விடுக்க, அல்லது முக்கிய பந்துவீச்சாளர்களில் ஒருவருக்கு மோசமான நாளாக இருந்தால் பந்து வீசுவார்கள். 2012 ஆம் ஆண்டில், டெஸ்ட் அணிகள் சம்பந்தப்பட்ட ஒரு போட்டிக்கு 11.9 பந்துவீச்சாளர்கள் பயன்படுத்தப்பட்டனர் ஆனால் இப்போது 9.4 மட்டுமே.

### (3) துரத்தி அடித்தல்

இறுதி 20 ஓவர்களில் 120 முதல் 180 ரன்களுக்கு இடையேயான வெற்றி-இலக்குகள், 2007 மற்றும் 2011 உலகக்கிண்ணங்களுக்கு இடையில் டெஸ்ட் அந்தஸ்து

உள்ள அணிகளுக்கு இடையேயான ஒருநாள் போட்டிகளில் 11 இல் இரண்டு முறை மட்டுமே துரத்தப்பட்டு வெற்றி கிடைத்திருந்தது. பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின், இதுபோன்ற ஒரு சூழ்நிலையை எதிர்கொள்வது மோசமானதல்ல, ஏனென்றால் இப்போது அத்தகைய வெற்றி-இலக்குகள் ஒவ்வொரு ஐந்து சூழ்நிலைகளிலும் இரண்டு முறை துரத்தி வெற்றி பெறப்படுகின்றன. துரத்தும் அணிகளுக்கு ஆட்டமே சாதகமாக மாறிவிட்டது என்பதல்ல. இதே காலகட்டத்தில், துரத்தும் அணிகள் வெற்றி பெறும் வீதம் 50ூ க்கு அண்மையில் உள்ளது.

### (4) இரட்டை சதம்

2011 உலகக் கோப்பைக்கு முன் ஒருமுறை மட்டுமே அடிக்கப்பட்டது. 2015 உலகக் கோப்பையில் இரண்டு உட்பட ஒன்பது முறை பெறப்பட்டுள்ளது.

### (5) கைவிரல் சுழற்பந்து வீச்சாளர்

முன்னைய காலங்களில் கைவிரல் சுழற்பந்து வீச்சாளர்களே அதிக ஓவர்களை வீசினர். இப்போது ரஷீட் சம்பா சஹால் ஹசரங்க போன்ற மணிக்கட்டு சுழற்பந்து வீச்சாளரே அதிகம். அஸ்வின் போன்ற கைவிரல் சுழற்பந்து வீச்சாளர் அணிகளில் தேர்வு செய்யப்படுவதில்லை.



### (6) சொந்த மைதான சாதக தன்மை

2011க்கு முன்னர் ஒரே ஒரு சொந்த அணி - 1996 இல் இலங்கை மட்டுமே- உலகக் கிண்ணத்தை வென்றிருந்தது. கடைசி மூன்று உலகக் கிண்ண தொடரிலும் நடாத்திய நாடுகளே வென்றுள்ளன, அவை பெரிய அணிகளும் கூட (இந்தியா, அவுஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து).

### (7) சூப்பர் ஓவர் முறையிலான வெளியேற்றம்

2011 உலகக் கோப்பையில் டைபிரேக்கர் இல்லை. 2019ம் ஆண்டு ரி20 பாணியிலான சூப்பர் ஓவர்கள் அல்லது ஒரு சூப்பர் ஓவர் நொக்-அவுட்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது, ஆனால் அதுவும் ஒரு நியாயமற்ற சூழ்நிலைக்கு வழிவகுத்தது, அங்கு சூப்பர் ஓவருக்குப் பிறகும் சாம்பியனைத் தீர்மானிக்க பவுண்டரி எண்ணிக்கை பயன்படுத்தப்பட்டது. இப்போது சூப்பர் ஓவர்கள் வெற்றி பெறும் வரை விளையாடப்பட போகிறது.

மூன்று சூப்பர் ஓவர்கள் சமன் செய்யப்பட்டு நேரம் முடிந்தால், போட்டி சமநிலையில் முடிவடையும். அரையிறுதியில், லீக் போட்டிகளில் தரவரிசையில் முன்னிலையில் உள்ள அணி முன்னேறும். இறுதிப் போட்டியில், அணிகள் கூட்டு வெற்றியாளர்களாக அறிவிக்கப்படுவார்கள்.

## (8) பவர்பிளே (Power Play)

2011 ஆம் ஆண்டில், பத்து ஓவர்கள் கட்டாய பவர்பிளேயையும், தலா ஐந்து ஓவர்கள் பந்துவீச்சு மற்றும் துடுப்பாட்ட பவர்பிளேயையும் இருந்தது. பவர்பிளே இல்லாத 30 ஓவர்களில், 30 யார்(30 லயசனள) வட்டத்திற்கு வெளியே ஐந்து களத்தடுப்பாளர் அனுமதிக்கப்பட்டனர். இப்போது ஒரு இன்னிங்ஸின் மூன்று கட்டங்கள் உள்ளன: முதல் பத்து ஓவர்களுக்கு வட்டத்திற்கு வெளியே இரண்டு களத்தடுப்பாளர், அடுத்த 30 ஓவர்களுக்கு வட்டத்திற்கு வெளியே நான்கு களத்தடுப்பாளர், மற்றும் கடைசி பத்து ஓவர்களுக்கு வட்டத்திற்கு வெளியே ஐந்து களத்தடுப்பாளர். பெரிய வித்தியாசம் என்னவென்றால், வட்டத்திற்கு வெளியே நான்கு களத்தடுப்பாளர் நிற்கும் 30 ஓவர்கள், இது இன்னிங்ஸில் அதிக பவுண்டரி பெற வழிவகுக்கிறது மற்றும் நடுத்தர ஓவர்களில் பந்துவீச்சாளர்களின் நிலைமை மிகவும் கடினமாக்குகிறது. இதனால் முன்னர் போன்று இப்போது பந்துவீச்சாளர்கள் தொடர்ச்சியாக 5 ஓவர்களை இந்த நடு இன்னிங்ஸில் வீசுவதில்லை.

## (9) இரு புதிய பந்துகள்

வெள்ளை நிற பந்துகள் 30 ஓவர்களுக்குப் பிறகு நிறமாற்றம் அடைவதால், ஒரு பந்தில் 25 ஓவர்களுக்கு மேல் வீசப்படாமல் இருப்பதை ஐசிசி உறுதி செய்துள்ளது. ஒவ்வொரு முனையிலும் ஒரு பந்து பயன்படுத்தப்படுகிறது, மேலும் மறுமுனையில் இருந்து ஒரு ஓவர் வீசப்படும் போது மற்றைய பந்து நடுவரிடம் இருக்கும் . நடு இன்னிங்ஸில் நான்கு களத்தடுப்பாளர்களுடன் சேர்த்து, இது மேலும் சுழற்பந்து வீச்சாளர்களின் நிலைமையை மிகவும் கடினமாக்கியது.

## சாதனை படைத்த இலங்கை மாணவி




மனித உடலிலுள்ள 423 உள் உறுப்புகளின் பெயர்களை 4 நிமிடங்களில் கூறி பொகவந்தலாவையைச் சேர்ந்த கனிஷிகா என்ற 8 வயது பாடசாலை மாணவி சோழன் உலக சாதனை புத்தகத்தில் அதிக ஞாபகசக்தி கொண்டவர்களுள் ஒருவராக இடம்பிடித்துள்ளார்.